# T.P.M Sunday School



# Standard : 3



பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; நீதி:22:6

# பொருளடக்கம்


1. மோசேயின் இளமைப்பருவம்
2. தேவன் மோசேயை அழைத்தது
3. எகிப்தில் பார்வோன் முன் மோசே
4. எகிப்தின் மேல் வந்த வாதைகள் (பகுதி I)
5. எகிப்தின் மேல் வந்த வாதைகள் (பகுதி II)
6. பஸ்கா ஆட்டுக்குட்டி
7. இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தது
8. மாராவின் தண்ணீர்
9. இஸ்ரவேலா வனாந்தரத்தில் மன்னாவினால் போஷிக்கப்பட்டது
10. ரெவிதீமில் இஸ்ரவேலர்
11. கர்த்தராகிய இயேசு லேகியோனைத் துரத்தியது
12. யவீருவின் மகள் உயிரோடெழுப்பப்பட்டது
13. யோவான்ஸ்நானனின் மரணம்
14. ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்
15. கர்த்தராகிய இயேசு கடலின்மேல் நடந்தது
16. கானானிய ஸ்திரீயின் மகள் குணமாக்கப்பட்டது
17. கர்த்தராகிய இயேசு நாலாயிரம் பேரைப் போஷித்தது
18. கர்த்தராகிய இயேசுவின் மறுரூபம்
19. கர்த்தராகிய இயேசு சந்திரரோகியை சுகமாக்கியது
20. கர்த்தராகிய இயேசு வரிப்பணம் செலுத்தியது

# MEMORY VERSES (STD 3)

| L.No | Verse |
|---|---|
| 1 | யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை் நீ என் தாசன் நான் உன்னை உருவாக்கினேன்˙ நீ என் தாசன் இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை, |
| 2 | ஆதலால், நீ போ˙ நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார். |
| 3 | நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். |
| 4 | ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். |
| 5 | ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது. |
| 6 | ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. |
| 7 | நீர் மீட்டுக் கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர் உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழி நடத்தினீர். |
| 8 | உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள் அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். |
| 9.1 | தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர் கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார் உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். |
| 9.2 | தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று,அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக, |
| 10 | உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன் என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். |
| 11.1 | ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். |
| 11.2 | நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். |
| 12 | இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். |
| 13 | பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே. |
| 14 | கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். |

15 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.

16 விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் ஏனேன்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

17 மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும் சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து.தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிகட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசிர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.

18 இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை ஆகிலும் கடைசி எக்காளம் தோனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்,

19.1 பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்

19.2

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனஉருதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.

20

ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்குள்: எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்கு தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு தீர்வையையும் செலுத்துங்கள்: எவனைக் கனம் பண்ணவேண்டியதோ அவனை கனம்பண்ணுங்கள்.

# மோசேயின் இளமைப் பருவம்

(யாத்திராகமம் 1 : 22 ; 2 : 1 – 10 ; 6 : 20)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

ஏசாயா 44 : 21

யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை ; நீ என் தாசன் ; நான் உன்னை உருவாக்கினேன் ; நீ என் தாசன் ; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை,

**II** *போதனை :* (2 Marks)

கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களை அவர்களுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து தெரிந்தெடுத்து அவர்களைப் பாதுகாக்கிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. அம்ராம் - லேவி குடும்பம் (யாத் 2 : 1, 6 : 20)
2. அம்ராம் - மோசேயின் தகப்பன் (யாத். 2 : 1, 6 : 20)
3. யோகெபேத் - மோசேயின் தாய் (யாத். 2 : 2)
4. யோகெபேத் - லேவியின் குமாரத்தி (யாத். 2 : 1, 6 : 20)
5. மிரியாம் - மோசேயின் சகோதரி (யாத்.2 : 4, 1நாளா.6 : 3)
6. மோசே - அழகுள்ள பிள்ளை (யாத்.2 : 2)
7. மோசே - ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன் (யாத் 2 : 10)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. பார்வோன் எபிரெயருக்குப் பிறக்கும் ஆண்பிள்ளைகளை____________________போட்டு விடும்படி கட்டளையிட்டான்.
2. மோசேயின் தாய் அவனை____________________பெட்டியிலே வைத்து நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள்.
.
3. ____________________மோசேக்கு என்ன சம்பவிக்குமோ என்று தூரத்திலே நின்று கவனித்தாள்.
4. மோசே பெரிதான போது, அவன் தாய் அவனை, _______________ யினிடத்தில் கொண்டு போய் விட்டாள்.
5. பார்வோனின் குமாரத்தி பிள்ளையை ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி அதற்கு ____________________ என்று பேரிட்டாள்..

*விடைகள்*

*1. நதியிலே (யாத். 1 : 22)*
*2. நாணல் (யாத். 2 : 3)*
*3. மிரியாம் (யாத். 2 : 4)*
*4. பார்வோனுடைய குமாரத்தி (யாத். 2 : 10)*
*5. மோசே (யாத். 2 : 10)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. மோசே பிறந்த போது அவனுடைய தாய் அவனை எத்தனை மாதம் ஒளித்து வைத்தாள்?
   மூன்றுமாதம் *(யாத். 2 : 2)*

2. அம்ராமும் யோகெபேத்தும் எங்கு அடிமைத்தனத்தின் கீழ் இருந்தார்கள்?
   எகிப்து *(பாடத்திட்டம்)*

3. எபிரெயருக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் கொன்றுபோட வேண்டும என்று கட்டளையிட்டது யார்?
   பார்வோன் . *(யாத். 1 : 22)*

4. பார்வோனின் குமாரத்தி பிள்ளையை வளர்க்கும்படி அதை யாரிடத்தில் கொடுத்தாள்?
   பிள்ளையின் தாயிடம் *(யாத். 2 : 9)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. மோசே எந்தக் குடும்பத்தை சேர்ந்தவன்?
   லேவி குடும்பம் (யாத். 2 : 1)

2. மோசேயின் பெற்றோர்கள் யார்?
   லேவி குடும்பத்தைச் சேர்ந்த அம்ராமும் யோகெபேத்தும் (யாத் 2 : 1)

3. நதியிலே ஸ்நானம் பண்ண வந்தது யார்?
   பார்வோனுடைய குமாரத்தி (யாத். 2 : 5)

4. நாணற்பெட்டியை திறந்தபோது பிள்ளை என்ன செய்தது?
   பிள்ளை அழுதது (யாத். 2 : 6)

5. நாணற்பெட்டியில் இருந்த பிள்ளை அழுதபோது அதின்மேல் இரக்கமுற்றது யார்?
   பார்வோனின் குமாரத்தி (யாத். 2 : 6)

6. மிரியாம் மோசேயை வளர்க்கும்படி யாரை பார்வோனின் குமாரத்தியிடம் அழைத்துக் கொண்டு போனாள்?
   பிள்ளையின் தாயை (யாத். 2 : 8)

7. மோசே பெரிதானபோது யாருக்கு குமாரனானான்?
   பார்வோனுடைய குமாரத்திக்கு குமாரனானான் (யாத் 2 : 10)

**VII** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. மோசேயின் தாய் அவனை ஏன் ஒளித்து வைத்தாள்?
   மோசே பிறந்தபோது அவனுடைய தாய், அவனை அழகுள்ள பிள்ளை என்று கண்டு ஒளித்து வைத்தாள்.(யாத். 2 : 2)

2. மோசேயை நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தபின்பு அவனுடைய தமக்கை என்ன செய்தாள்?
   மோசேக்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அவன் தமக்கை தூரத்திலே நின்று கொண்டிருந்தாள். (யாத். 2 : 4)

3. நாணலுக்குள்ளே இருந்த பெட்டியைக் கண்டது யார்? அப்பொழுது அவள் என்ன செய்தாள்?
   1) பார்வோனின் குமாரத்தி
   2) அவள் தன் தாதியை அனுப்பி அதைக் கொண்டு வரும்படி செய்தாள்.
   (யாத் . 2 : 5)

4. பார்வோனின் குமாரத்தி நாணற்பெட்டியை திறந்து பார்த்த பின்பு என்ன செய்தாள்?

பிள்ளையின் மேல் இரக்கமுற்று அது எபிரேய பிள்ளைகளில் ஒன்று என்றாள்,(யாத்.2:6)

5. மிரியாம் பார்வோனின் குமாரத்தியிடம் என்ன கேட்டாள்?

மிரியாம் பார்வோனின் குமாரத்தியிடம் உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படி எபிரேய ஸ்திரீகளில் பால் கொடுக்கிற ஒருத்தியை அழைத்து வரட்டுமா என்றாள்.(யாத2:7)

6. மோசே என்றால் அர்த்தம் என்ன?

மோசே என்றால் ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன். (யாத் 2 : 10)

## VIII. *சுருக்கமான விடையளி*: (4 Marks)

1. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் பெருகி மிகுதியும் பலத்துப்போன போது, பார்வோன் என்ன செய்தான்?

பார்வோன் பிறக்கும் எபிரெய ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடவும், பெண் பிள்ளைகளையெல்லாம் உயிரோடு வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டான். (யாத் 1 : 22)

2. மோசேயின் தாய் அவனை ஒளித்து வைக்கக் கூடாமல் போனபோது என்ன செய்தாள்?

ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதற்குப் பிசினும், கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். (யாத். 2 : 3)

3. பார்வோனின் குமாரத்தி நாணற்பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட பிள்ளையை வளர்க்கும்படி வந்த தாயிடம் என்ன சொன்னாள்?

பார்வோனுடைய குமாரத்தி பிள்ளையை வளர்க்கும்படி வந்த தாயிடம், "நீ இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திரு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்" என்றாள். (யாத். 2 : 9)

***************

# தேவன் மோசேயை அழைத்தது

(யாத்திராகமம் அதிகாரம் 3, 4)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாத்திராகமம் 4 : 12

ஆதலால், நீ போ ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.

**II** *போதனை* : (2 Marks)

கர்த்தர் தம்முடைய ஜனத்தை மீட்பதற்காக முதலாவது ஒரு மனுஷனை அழைத்து, அவனைத் தைரியப்படுத்தி , அவனுக்கு அதிகாரங் கொடுத்து அவனை அனுப்புகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. மோசே - அனுப்பப்பட்டவன் (யாத் 3 : 10)
2. மோசே - அழைக்கப்பட்டவன் (யாத். 3 : 4)
3. ஆரோன் - லேவியன் (யாத். 4 : 14)
4. ஆரோன் - மோசேயின் சகோதரன் (யாத். 4 : 14)
5. ஆரோன் - நன்றாய்ப் பேசுகிறவன் (யாத்.4 : 14)
6. இஸ்ரவேல் புத்திரர் - தேவனுடைய ஜனம் (யாத்.3 : 10)
7. எத்திரோ - மோசேயின் மாமன் (யாத் 3 : 1)
8. ஓரேப் - தேவ பர்வதம் (யாத். 3 : 1)
9. கானான் - பாலும் தேனும் ஓடுகிற தேசம் (யாத் 3 : 8)
10. கானான் - நலமும் விசாலமுமான தேசம் (யாத் 3 : 8)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. கர்த்தருடைய தூதனானவர்__________________நடுவிலிருந்து மோசேக்கு தரிசனமானவர்.
2. முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும் __________________இருந்தது.
3. தேவன் மோசேயிடம் உன் கால்களில் இருக்கிற__________________கழற்றிப் போடு என்றார்.
4. தேவன் மோசேயிடம் நீ நிற்கிற இடம் , __________________ என்றார்..
5. மோசே தன்னுடைய கோலை தரையிலே போட்ட போது அது __________________ ஆயிற்று.
6. மோசே தன் கையை தன் மடியிலே போட்டு எடுத்த போது__________________ பிடித்திருந்தது.
7. கர்த்தர் மோசேக்கு உதவியாக __________________னை அனுப்பினார்.

*விடைகள்*

| | | | |
|---|---|---|---|
| 1. முட்செடி | (யாத். 3 : 2) | 4. பரிசுத்த பூமி | (யாத். 3 : 5) |
| 2. வெந்து போகாமல் | (யாத். 3 : 2) | 5. சர்ப்பம் | (யாத். 4 : 3) |
| 3. பாதரட்சை | (யாத். 3 : 5) | 6. வெண்குஷ்டம் | (யாத். 4 : 6) |
| | | 7. ஆரோன் | (யாத். 4 : 14) |

## V <u>*ஒரே வார்த்தையில் விடை எழுது :*</u> (1 Mark)

1. முட்செடியின் நடுவிலிருந்து தேவன் யாரைக் கூப்பிட்டார்?
   மோசே *(யாத். 3 : 4)*

2. எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரர் யார் நிமித்தம் கூக்குரலிட்டார்கள்?
   ஆளோட்டிகள் *(யாத் 3 : 7)*

3. இஸ்ரவேல் ஜனங்கள் படுகிற வேதனைகளை அறிந்தது யார்?
   தேவன் *(யாத். 3 : 7)*

4. இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்கினவர்கள் யார்?
   எகிப்தியர் *(யாத். 3 : 9)*

5. ஆரோனுக்கு தேவனாக கர்த்தர் யாரை வைத்தார்?
   மோசேயை *(யாத் 4 : 16)*

## VI <u>*ஓரிரு வார்த்தைகளில் விடையளி*</u> : (1 Mark)

1. முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையை உற்றுப் பார்த்தது யார்?
   மோசே (யாத் 3 : 2)

2. தேவன் தம் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி யாரை அனுப்பினார்?
   மோசேயை அனுப்பினார். (யாத். 3 : 10)

3. தேவன் தம் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி மோசேயை யாரிடம் அனுப்பினார்?
   பார்வோனிடம் அனுப்பினார். (யாத். 3 : 10)

4. இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் எங்கு போய் எட்டினது?
   தேவனுடைய சந்நிதியில் போய் எட்டினது. (யாத். 3 : 9)

5. மோசேக்குக் கர்த்தர் தரிசனமானாரென்பதை இஸ்ரவேல் ஜனங்கள் நம்புவதற்குக் கர்த்தர் எத்தனை அடையாளங்களைக் கொடுத்தார்?
   மூன்று அடையாளங்களைக் கொடுத்தார். (யாத். 4 : 1 - 9)

6. தேவன் மோசேக்கு கொடுத்த முதலாவது அடையாளம் என்ன?
   அவனுடைய கோல் சர்ப்பமாயிற்று (யாத். 4 : 1 - 5)

7. தேவன் மோசேக்கு கொடுத்த இரண்டாவது அடையாளம் என்ன?
   மோசேயின் கை உறைந்த மழையைப் போல வெண்குஷ்டம் பிடித்தது (யாத் 4: 6)

8. நான் திக்குவாயும் மந்தநாவும உள்ளவன் என்று கர்த்தரிடம் கூறியது யார்?
   மோசே (யாத். 4 : 10)

9. மோசேயை காணும்போது யாருடைய இருதயம் மகிழும் என்று கர்த்தர் அவனிடம் சொன்னார்?
   ஆரோனின் இருதயம் (யாத். 4 : 14)

10. இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயும் ஆரோனும் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட போது என்ன செய்தார்கள்?
    ஜனங்கள் விசுவாசித்தார்கள். தலை குனிந்து கர்த்தரைத் தொழுது கொண்டார்கள். (யாத். 4 : 31)

**VII ஓரிரு வாக்கிய□களில் விடையளி :** (2 Marks)

1. கர்த்தருடைய தூதனானவர் மோசேக்கு எவ்வாறு தரிசனமானார்?
கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜீவாலையிலே நின்று மோசேக்குத் தரிசனமானார். (யாத். 3 : 2)

2. முட்செடியின் நடுவிலிருந்து அக்கினி உண்டான போது அது என்ன ஆயிற்று? (அல்லது) மோசே கண்ட அற்புதக் காட்சி என்ன?
முட்செடி அக்கினியால் ஜீவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது. (யாத் 3:3)

3. மோசே தேவன் முதன்முறையாக அவனோடு பேசினபோது என்ன செய்தான்?
மோசே தேவனை நோக்கிப் பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக் கொண்டான் (யாத் 3 : 6)

4. கானான் தேசம் எப்படிப்பட்ட தேசம்?
கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசம். (யாத்.3:8)

5. மோசேக்கு கர்த்தர் தரிசனமானாரென்பதை ஜனங்கள் நம்புவதற்குக் கர்த்தர் அவனுக்கு கொடுத்த இரண்டாவது அடையாளத்தை விவரி?
கர்த்தர் மோசேயிடம், ''உன் கையை உன் மடியிலே போடு'' என்றார். அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுக்கும்போது அவன் கை உறைந்த மழையைப் போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது.
அவர், ''உன் கையைத் திரும்பவும் உன் மடியிலே போடு'' என்றார். அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுத்த போது, அது திரும்ப அவனுடைய மற்றச் சதையைப் போலாயிற்று (யாத். 4 : 6,7)

6. மோசேக்கு கர்த்தர் தரிசனமானாரென்பதை ஜனங்கள் நம்புவதற்குக் கர்த்தர் கொடுத்த மூன்றாவது அடையாளத்தை விவரி?
கர்த்தர் மோசேயிடம் , ''நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்திலே ஊற்றுவாயாக. நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாகும்'' என்றாா. (யாத். 4 : 9)

7. கர்த்தர் செய்த மூன்று அடையாளங்களையும் கண்டபின்பு மோசே கர்த்தரிடம் என்ன சொன்னான்?
மோசே கர்த்தரிடம், ''ஆண்டவரே இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன்'' என்றான். (யாத். 4 : 10)

8. கர்த்தருக்கு மோசேயின் மேல் ஏன் கோபமுண்டது?
கர்த்தர் மோசேயிடம், ''நீ போ நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்கு போதிப்பேன்'' என்றார்.
அதற்கு மோசே, ''ஆண்டவரே நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்'' என்றான். ஆகையால் கர்த்தருக்கு மோசேயின் மேல் கோபமூண்டது. (யாத். 4 : 14)

9. கர்த்தர் ஆரோனைக் குறித்து மோசேயிடம் என்ன கூறினார்?
கர்த்தர் மோசேயிடம், ''உன் சகோதரனாகிய ஆரோன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வருகின்றான். உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும்'' என்றார். (யாத் 4 : 14)

10. கர்த்தர் ஆரோனைக் கொண்டு என்ன செய்யும்படி மோசேயிடம் கூறினார்?
கர்த்தர் மோசேயிடம், ''நீ ஆரோனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப்போடு, அவன் உனக்குப்பதிலாக ஜனங்களோடே பேசுவான். அவன் உனக்கு வாயாக இருப்பான்,'' என்றார். (யாத். 4 : 16)

**VIII** *சுருக்கமான விடையளி* : (4 Marks)

**1.** மோசே முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன என்று பார்க்கும்படி கிட்ட போன போது தேவன் அவனிடம் என்ன சொன்னார்?

தேவன் மோசேயிடம்,

1) இங்கே கிட்டிச் சேராயாக.
2) உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு.
3) நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். (யாத். 3 : 6)

**2.** கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுதலையாக்கும்படி ஏன் இறங்கினார்?

கர்த்தர்,
1) எகிப்திலிருக்கிற இஸ்ரவேலரின் உபத்திரவத்தை பார்த்தார்.
2) ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டார்.
3) அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்தார்.
4) எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலைக் கண்டார்.

ஆகையால் அவர்களை விடுதலையாக்கி கானான் தேசத்தில் கொண்டு போய் சேர்க்கும்படி இறங்கினார். (யாத். 3 : 7 - 9)

**3.** மோசேக்கு கர்த்தர் தரிசனமானாரென்பதை ஜனங்கள் நம்புவதற்கு கர்த்தர் அவனுக்குக் கொடுத்த முதலாவது அடையாளத்தை விவரி.

கர்த்தர் மோசேயிடம், "உன் கையிலிருக்கிறது என்ன" என்றார். "ஒரு கோல்" என்றான். "அதைத் தரையிலே போடு" என்றார். அவன் அதைத் தரையிலே போட்ட போது அது சர்ப்பமாயிற்று. மோசே அதற்கு விலகியோடினான். "உன் கையை நீட்டி அதின் வாலைப் பிடி," என்றார். அதைப் பிடித்தபோது அது அவன் கையில் கோலாயிற்று (யாத். 4 :2 - 4)

**4.** மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரை வரவழைத்து என்ன செய்தார்கள்?

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும் அவர்கள் படும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப் பார்த்தார் என்றும் அவர்களிடம் சொன்னார்கள். ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அடையாளங்களையும் செய்தார்கள். (யாத். 4 : 30, 31)

***************

வகுப்பு : 3 | பாடம்-3 | ஞாயிறு பள்ளி

# எகிப்தில் பார்வோன் முன் மோசே

(யாத். அதி 5 ; 6 : 1 – 13; 7 : 10 - 13)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 34 : 17

நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்.

**II** *போதனை :* (2 Marks)

தம்முடைய ஜனங்களை உபத்திரவத்திலிருந்து விடுவிக்கும்படி கர்த்தர் மோசேயை அனுப்பினது போல, நாம் அவரை நோக்கிக் கூப்பிடும்போது நமக்கு உதவி செய்யும்படி தம்முடைய ஊழியக்காரரை அனுப்புகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. கர்த்தர் - சர்வ வல்லமையுள்ள தேவன் (யாத் 6 : 3)
2. கர்த்தர் - யேகோவா (யாத் 6 : 2)
3. கர்த்தர் - எபிரெயருடைய தேவன் (யாத் 5 : 3)
4. பார்வோன் - எகிப்தின் ராஜா (யாத 5 : 4)
5. பார்வோனின் இருதயம் - கடினமானது (யாத் 7 : 13)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் ____________________ , ____________________ கொண்டாட வேண்டும் என்று பார்வோனிடம் சொன்னார்கள்.

2. ____________________ மோசேயிடம் நீங்கள் பார்வோனுக்கு முன்பாக எங்கள் வாசனையைக் கெடுத்தீர்கள் என்றார்கள்.
.
3. ____________________ பார்வோனுக்கு முன்பாக தன் கோலைப் போட்டான்.

4. ______________ சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான்.

5. __________________ மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கிற்று.

*விடைகள்*

*1. கர்த்தருக்கு பண்டிகை (யாத். 5 : 1)*
*2. இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் (யாத். 5 : 21)*
*3. ஆரோன் (யாத். 7 : 10)*
*4. பார்வோன் (யாத். 7 : 11)*
*5. ஆரோனின் கோல் (யாத். 7 : 12)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. நான் கர்த்தரை அறியேன் என்று மோசேயிடம் கூறியது யார்?
   பார்வோன் . *(யாத். 5 : 2)*

2. கர்த்தர் எந்த நாமத்தினால் ஆபிரகாமுக்கு தரிசனமாகவில்லை?
   யேகோவா . *(யாத் 6 : 3)*

3. மணமடிவினாலும் கொடுமையான வேலையினாலும் மோசேக்குச் செவிகொடாமற் போனவர்கள் யார்?
இஸ்ரவேல் புத்திரர் . *(யாத். 6 : 9)*

4. “நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்” என்று கர்த்தரிடம் கூறியது யார்?
மோசே *(யாத். 6 : 12)*

5. ஆரோனுடைய கோல் யாருடைய கோல்களை விழுங்கிற்று?
மந்திரவாதிகள் *(யாத் 7 : 12)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. இஸ்ரவேல் புத்திரரை எங்கு போய் பண்டிகை கொண்டாடும்படி கர்த்தர் கட்டளையிட்டார்?
வனாந்தரத்தில் (யாத். 5 : 1)

2. இஸ்ரவேல் புத்திரரை அதிகமாக ஒடுக்கினது யார்?
பார்வோன் (யாத். 5 : 6 - 8)

3. மோசேயின் வேண்டுகோளுக்கு இணங்க மறுத்த பார்வோன், இஸ்ரவேல் புத்திரரை என்ன செய்தான்?
இஸ்ரவேல் புத்திரரை முன்பைக் காட்டிலும் இன்னும் அதிகமாக ஒடுக்கினான். (யாத்.5:6-9)

4. இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் பார்வோனின் சமூகத்திலிருந்து வந்து யாரிடம் முறையிட்டார்கள்?
மோசேயிடம் முறையிட்டார்கள். (யாத். 5 : 21)

5. பார்வோன் ஜனங்களை உபத்திரவப் படுத்துகிறான் என்று கர்த்தரிடம் சொன்னது யார்?
மோசே (யாத். 5 : 22)

6. கர்த்தர் எந்த நாமத்தினால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு தரிசனமானார்?
சர்வவல்லமையுள்ள தேவன் (யாத். 6 : 3)

7. கானான் தேசத்தில் பரதேசிகளாய் தங்கினவர்கள் யார்?
ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு (யாத். 6 : 4)

8. கர்த்தர் கானான் தேசத்தை யாருக்கு சுதந்திரமாக கொடுப்பேன் என்றார்?
இஸ்ரவேல் புத்திரருக்கு (யாத். 6 : 8)

9. இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு போகும்படி கர்த்தர் யாருக்கு கட்டளை கொடுத்து அனுப்பினார்?
மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளை கொடுத்து அனுப்பினார். (யாத். 6 : 13)

10. யாருடைய இருதயம் இஸ்ரவேலருக்கு விரோதமாக கடினப்பட்டது?
பார்வோனின் இருதயம் (யாத். 7 : 13)

**VII** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் என்ன கேட்டனர்?
வனாந்தரத்தில் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாட இஸ்ரவேல் புத்திரரை போகவிட வேண்டும் என்று கேட்டனர். (யாத். 5 : 1)

2. இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் தங்களுக்கு இக்கட்டு வந்தது என்று எப்போது கண்டார்கள்?
பார்வோன் அவர்களிடம், “உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை. ஆனாலும் கணக்கின்படியே நீங்கள் செங்கலை ஒப்புவிக்க வேண்டும்” என்றான். அப்போது அவர்கள் தங்களுக்கு இக்கட்டு வந்தது என்று கண்டார்கள். (யாத். 5 : 19)

**3.** ஆரோன் தன்னுடைய கோலை யாருக்கு முன்பாகப் போட்டான்? அப்போது அது என்ன ஆயிற்று?

1) ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போட்டான்.

2) அது சர்ப்பமாயிற்று (யாத். 7 : 10)

**4.** ஆரோனின் கோல் சர்ப்பமானதைக் கண்டபோது பார்வோன் என்ன செய்தான்?

பார்வோன் எகிப்தின் சாஸ்திரிகளையும், சூனியக்காரரையும், மந்திரவாதிகளையும் அழைப்பித்தான். (யாத். 7 : 11)

**5.** எகிப்தின் மந்திரவாதிகள் தங்கள் மந்திரவித்தையினால் என்ன செய்தார்கள்?

எகிப்தின் மந்திரவாதிகள் ஒவ்வொருவனாகத் தன் தன் கோலைப் போட்டார்கள். அவர்களுடைய மந்திரவித்தையினால் அவைகள் சர்ப்பங்களாயின. (யாத். 7 : 12)

**6.** எகிப்தின் மந்திரவாதிகளின் கோல்களுக்கு என்ன சம்பவித்தது?

1) மந்திரவாதிகள் தங்கள் கோல்களை போட்ட போது அவைகள் சர்ப்பங்களாயின.

2) ஆரோனுடைய கோல் அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று. (யாத். 7 : 12)

**7.** மோசேயும் ஆரோனும் செய்த முதலாம் அடையாளத்தைக் கண்டபின்பு பார்வோன் என்ன செய்தான்?

1) கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது.

2) அவன் அவர்களுக்கு செவி கொடாமற்போனான். (யாத். 7 : 13)

**VIII** *__சுருக்கமான விடையளி__* : (4 Marks)

**1.** மோசேயும் ஆரோனும் வனாந்தரத்தில் பண்டிகை கொண்டாட இஸ்ரவேலரைப் போகவிடும்படி பார்வோனிடத்தில் அனுமதி கேட்ட போது அவன் என்ன பதில் சொன்னான்?

பார்வோன் அவர்களிடம், "நான் இஸ்ரவேலரைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன். நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" என்றான். (யாத். 5 : 2)

**2.** பார்வோன் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக தன் ஆளோட்டிகளிடம் என்ன கூறினான்?

பார்வோன் ஆளோட்டிகளிடம்,

1) ஜனங்களுக்கு செங்கல் வேலைக்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம். அவர்களே சேர்க்கட்டும்.

2) முன்செய்து கொடுத்த கணக்கின்படியே செய்யும்படி சொல்லுங்கள். ஒன்றும் குறைக்க வேண்டாம்.

3) அந்த மனிதர் மேல் முன்னிலும் அதிக வேலையைச் சுமத்துங்கள் அவர்கள் கஷ்டப்படட்டும் என்றான். (யாத். 5 : 7 - 9)

**3.** இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் மோசேயிடம் என்ன முறையிட்டனர்?

இஸ்ரவேல் புத்திரர் மோசேயிடம்,

1) நீங்கள் பார்வோனுக்கு முன்பாக எங்கள் வாசனையைக் கெடுத்து விட்டீர்கள்.

2) எங்களைக் கொல்லும்படி அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்து விட்டீர்கள்.

3) ஆகவே கர்த்தர் உங்களைப் பார்த்து நியாயந்தீர்ப்பார் என்றார்கள். (யாத். 5 : 21)

**4.** மோசே இஸ்ரவேல் புத்திரரின் முறையிடுதலைக் கேட்ட போது என்ன செய்தான்?

மோசே கர்த்தரிடத்தில் திரும்பிப் போய்,

1) ஆண்டவரே, இந்த ஜனங்களுக்குத் தீங்குவரப் பண்ணினதென்ன?

2) ஏன் என்னை அனுப்பினீர்?

3) நான் உமது நாமத்தைக் கொண்டு பேசும்படி பார்வோனிடத்தில் பிரவேசித்தது முதல் அவன் இந்த ஜனங்களை உபத்திரவப்படுத்துகிறான்.

4) நீர் உம்முடைய ஜனங்களை விடுதலையாக்கவில்லையே என்று முறையிட்டான். (யாத் 5: 22 , 23)

**************

# எகிப்தின் மேல் வந்த வாதைகள்
# (பகுதி - I)

(யாத்திராகமம் 7 : 14 - 25 ; அதி. : 8 ; 9 : 1 – 6)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யோபு 5 : 9
ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. கர்த்தர் | - | எபிரெயருடைய தேவன் | (யாத் 7 : 16) |
| 2. இரண்டாம் வாதை | - | தவளைகள் | (யாத். 8 : 2) |
| 3. மூன்றாம் வாதை | - | பேன்கள் | (யாத். 8 : 16) |
| 4. நான்காம் வாதை | - | வண்டுகள் | (யாத். 8 : 21) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. கர்த்தர் ____________________ சொற்படி செய்தார்.
2. எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் ____________________ ஆயிற்று..

.

*விடைகள்*
*1. மோசேயின் (யாத். 8 : 13)* *2. பேன்கள் (யாத். 8 : 17)*

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. பார்வோனின் இருதயம் எப்படிப்பட்டது?
   கடினமானது *(யாத். 7 : 22)*

2. கர்த்தர் எகிப்தின் நதியை எத்தனை நாள் அடித்திருந்தார்?
   ஏழு *(யாத். 7 : 25)*

3. எந்த நாட்டை விசேஷப்படுத்தினார்?
   கோசேன் . *(யாத். 8 : 22)*

4. எகிப்து தேசம் எதினால் கெட்டுப் போயிற்று?
   வண்டுகளினால் *(யாத். 8 : 24)*

**V** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அனுப்பி விடுவதற்குப் பார்வோன் மறுத்த போது, கர்த்தர் எகிப்தியர் மேல் எத்தனை வாதைகளை அனுப்பினார்?
   பத்து வாதைகள்

2. எகிப்தின் மேல் கர்த்தர் அனுப்பின முதலாம் வாதை என்ன?
   எகிப்தின் நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறினது (யாத் 7 : 20)

3. எகிப்தியர் நதியின் தண்ணீர் குடிக்க உதவாதபடியால் என்ன செய்தார்கள்?
   ஊற்று தோண்டினார்கள் (யாத். 7 : 24)

4. எகிப்தின் மேல் கர்த்தர் அனுப்பின இரண்டாம் வாதை என்ன?
தவளைகள் வந்து எகிப்து தேசத்தை மூடிக்கொள்ளும்படி செய்தார். (யாத். 8 : 6)

5. பார்வோனுக்கு விரோதமாக வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் கர்த்தரை நோக்கி கூப்பிட்டது யார்?
மோசே (யாத். 8 : 12)

6. எகிப்தின் மேல் வந்த மூன்றாம் வாதை என்ன?
எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று (யாத். 8 : 17)

7. எகிப்தின் மந்திரவாதிகள் தங்கள் மந்திரவித்தையினால் பேன்களை பிறப்பிக்கக் கூடாமற்போன போது பார்வோனிடம் என்ன சொன்னார்கள் ?
இது தேவனுடைய விரல் என்றார்கள் (யாத். 8 : 19)

8. எகிப்தின் மேல் வந்த நான்காம் வாதை என்ன?
மகா திரளான வண்டு ஜாதிகள் எகிப்து தேசம் முழுதிலும் வந்தது. (யாத் 8 : 24)

9. மோசே எத்தனை நாள் பிரயாணம் போய் கர்த்தருக்கு பலியிட வேண்டும் என்று பார்வோனிடம் சொன்னான்?
மூன்று நாள் (யாத். 8 : 27)

10. எகிப்தின் மேல் வந்த ஐந்தாம் வாதை என்ன?
எகிப்தியருடைய மிருகஜீவன்கள் எல்லாம் கொள்ளை நோயினால் செத்துப் போயிற்று. (யாத். 9 : 6)

## VI *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. ஆரோன் தன் கையை எகிப்திலுள்ள தண்ணீர்கள் மேல் நீட்டின போது என்ன சம்பவித்தது?
தவளைகள் வந்து, எகிப்து தேசத்தை மூடிக் கொண்டது. (யாத். 8 : 6)

2. தவளைகள் எகிப்து தேசத்தை மூடிக் கொண்டதை கண்ட போது பார்வோன் என்ன செய்தான்?
பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, "அந்தத் தவளைகள் நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். கர்த்தருக்குப் பலியிடும்படி ஜனங்களைப் போகவிடுவேன்" என்றான். (யாத். 8 : 8)

3. கோசேன் நாட்டில் வண்டுகள் வராதபடி கர்த்தர் ஏன் அதை விசேஷப்படுத்தினார்?
1) பூமியின் நடுவில் கர்த்தரே தேவன் என்று பார்வோன் அறியும்படிக்கும்,
2)இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் வித்தியாசம் உண்டாக்கும்படிக்கும் அப்படிச் செய்தார். (யாத். 8 : 22, 23)

4. எகிப்து தேசம் வண்டுகளினாலே கெட்டுப் போனபோது, பார்வோன் என்ன செய்தான்?
பார்வோன் மோசேயையும் , ஆரோனையும் அழைத்து, நீங்கள் போய், உங்கள் தேவனுக்கு தேசத்திலே தானே பலியிடுங்கள் என்றான். (யாத். 8 : 25)

5. இஸ்ரவேலரின் மிருக ஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருக ஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணும்படி கர்த்தர் என்ன செய்தார்?
1) எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் கொள்ளைநோயினால் செத்துப் போயிற்று.
2) இஸ்ரவேல் புத்திரரின் மிருக ஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை. (யாத் 9 : 6)

## VII *சுருக்கமான விடையளி*: (4 Marks)

1. மோசேயும் ஆரோனும் கோலை ஓங்கி நதியிலுள்ள தண்ணீரை அடித்தபோது என்ன நேரிட்டது?
1) தண்ணீரெல்லாம் இரத்தமாயிற்று.
2) மீன்கள் செத்து நதி நாறிப்போயிற்று.
3) எகிப்தியர் நதியின் தண்ணீரைக் குடிக்கக் கூடாமற் போயிற்று.

4) எகிப்து தேசம் எங்கும் இரத்தமாயிற்று (யாத். 7 : 20, 21)

**2.** கர்த்தர் எகிப்தியர் மேல் அனுப்பின முதல் ஐந்து வாதைகளை வரிசையாக எழுது.
முதலாம் வாதை - தண்ணீர் இரத்தமாக மாறினது.(யாத். 7 : 17, 24)
இரண்டாம் வாதை - தவளைகள் (யாத். 8 : 2 - 14)
மூன்றாம் வாதை - பேன்கள் (யாத். 8 : 16 - 19)
நான்காம் வாதை - பலவித வண்டுகள் (யாத். 8 : 21 - 31)
ஐந்தாம் வாதை - மிருக ஜீவன்கள் மேல் கொள்ளை நோய்(யாத். 9 : 3 - 6)

**3.** பார்வோன் மோசேயிடம், உங்கள் தேவனுக்கு எகிப்து தேசத்திலே தானே பலியிடுங்கள் என்று கூறிய போது மோசே பார்வோனுக்கு என்ன மறுஉத்தரவு சொன்னான்?
மோசே, அப்படிச் செய்யத்தகாது,
1) எங்கள் தேவனுக்கு நாங்கள் எகிப்தியருடைய அருவருப்பைப் பலியிடுகிறதாயிருக்கும்.
2) நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம்போய், கர்த்தர் விதிக்கிறபடியே அவருக்குப் பலியிடுவோம் என்றான். (யாத். 8 : 26, 27)

***************

# எகிப்தின் மேல் வந்த வாதைகள்
# (பகுதி II)

(யாத்திராகமம் அதிகாரம் 9 - 12)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 136 : 4

ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.

**II** *போதனை* : (2 Marks)

தேவன் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் தமது வல்லமையை வெளிப்படுத்தித் தம்முடைய ஜனத்தை இரட்சிக்கிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. சூளையின் சாம்பல் - எரிபந்தமான கொப்புளங்கள் (யாத் 9 : 10)
2. ஆறாம் வாதை - எரிபந்தமான கொப்புளங்கள் (யாத். 9 : 10)
3. ஒன்பதாம் வாதை - காரிருள் (யாத். 10 : 22)
4. பத்தாம் வாதை - தலைப் பிள்ளை சங்காரம் (யாத். 12 : 29)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. கொப்புளங்களினிமித்தம் எகிப்தின் மந்திரவாதிகளும் ____________________க்கு முன்பாக நிற்க முடியவில்லை.
2. __________________பூமியின் முகம் முழுவதையும் மூடிற்று.
3. வெட்டுக்கிளிகளால் __________________தேசம் அந்தகாரப்பட்டது.

| *விடைகள்* | |
|---|---|
| *1. மோசே (யாத். 9 : 11)* | *3. எகிப்து (யாத். 10 : 15)* |
| *2. வெட்டுக்கிளிகள் (யாத். 10 : 14, 15)* | |

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. மோசே எங்கேயிருந்து சாம்பலை அள்ளி வானத்திற்கு நேராக இறைத்தான்?
   சூளையிலிருந்து *(யாத். 9 : 8)*

2. எகிப்து தேசம் எங்கும் எத்தனை நாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று?
   மூன்று நாள் *(யாத். 10 : 22)*

3. யாருடைய வாசஸ்தலங்களில் வெளிச்சம் இருந்தது?
   இஸ்ரவேல் புத்திரரின் . *(யாத். 10 : 23)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. மோசே எவ்வளவு சாம்பலை அள்ளி வானத்திற்கு நேராக இறைத்தான்?
   கைபிடி நிறைய அள்ளி இறைத்தான் (யாத். 9 : 8)

2. எகிப்து தேசத்தின் மேல் வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்தது எது?
கீழ் காற்று (யாத் . 10 : 13)

3. எகிப்து தேசத்தில் ஒரு பச்சிலையும் இராதபடி எல்லாவற்றையும் பட்சித்துப் போட்டது எது?
வெட்டுகிளிகள் (யாத். 10 : 15)

4. எகிப்து தேசத்தில் இருந்த தலையீற்றனைத்தையும் கர்த்தர் எப்பொழுது அழித்தார்?
நடுராத்திரியில் (யாத். 12 : 29)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. எகிப்து தேசத்தின் மேல் வந்த ஆறாம் வாதை என்ன?
மனிதர் மேலும் மிருக ஜீவன்கள் மேலும் மந்திரவாதிகள் மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று (யாத். 9 : 10)

2. எரிபந்தமான கொப்புளங்கள் எப்பொழுது எகிப்தியர் மேல் வந்தது?
மோசே கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை அள்ளி வானத்திற்கு நேராக இறைத்தான். அப்பொழுது எரிபந்தமான கொப்புளங்கள் வந்தது. (யாத். 9 : 10)

3. மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டிய போது என்ன சம்பவித்தது?
கர்த்தர் இடி முழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார். அக்கினி தரையின் மேல் வேகமாய் ஓடிற்று (யாத். 9 : 23)

4. எகிப்தியர் மேல் வந்த ஏழாம் வாதை என்ன?
கல்மழையோடு கூடிய அக்கினி (யாத். 9 : 24)

5. எகிப்தியர் மேல் வந்த எட்டாம் வாதை என்ன?
வெட்டுக்கிளிகள் எகிப்து தேசம் எங்கும் பரப்பி பூமியின் முகம் முழுதையும் மூடிற்று. தேசம் அந்தகாரப்பட்டது. (யாத். 10 : 13 - 15)

6. எகிப்தியர் மேல் வந்த ஒன்பதாம் வாதை என்ன?
எகிப்து தேசம் எங்கும் மூன்று நாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று. ஒருவரை ஒருவர் காணவும் இல்லை. ஒருவரும் தம்மிடத்தை விட்டு எழுந்திருக்கவும் இல்லை. (யாத். 10 : 22, 23)

7. எகிப்தின் மேல் வந்த பத்தாம் வாதை என்ன?
தலைப் பிள்ளை சங்காரம். எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார். (யாத். 12 : 29)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

1. எகிப்தின் மேல் வந்த கடைசி ஐந்து வாதைகள் யாவை?

| | | |
|---|---|---|
| ஆறாம் வாதை | - | மனிதர் மேலும் மிருக ஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் (யாத். 9 : 8 - 11) |
| ஏழாம் வாதை | - | கல்மழையோடு கலந்த அக்கினி. (யாத். 9 : 23 - 25) |
| எட்டாம் வாதை | - | வெட்டுக்கிளிகள் (யாத். 10 : 13 - 15) |
| ஒன்பதாம் வாதை | - | காரிருள் (யாத் 10 : 22, 23) |
| பத்தாம் வாதை | - | தலைப்பிள்ளைச் சங்காரம் (யாத் 12 : 29, 30) |

2. கல்மழையோடு கலந்த அக்கினி எவைகளை அழித்தது?

வெளியிலே இருந்த மனிதரையும், மிருக ஜீவன்களையும், பயிர்வகைகளையும், மரங்களையும் அழித்தது. (யாத் 9 : 25)

3. தலைப்பிள்ளை சங்காரத்தில் அழிக்கப்பட்டவர்கள் யார்?

சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும் அழிக்கப்பட்டது. மிருக ஜீவன்களின் தலையீற்றும் அழிக்கப்பட்டது. (யாத். 12 : 29)

***************

# பஸ்கா ஆட்டுக்குட்டி

(யாத்திராகமம் 12 : 1 – 11 , 21 - 37)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 கொரிந்தியர் 5 : 7

ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.

**II** *போதனை :* (2 Marks)

பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதினாலே இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள். அதுபோலவே, கர்த்தராகிய இயேசுவின் பலியினாலே நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. முதலாம் மாதம் - பிரதான மாதம் (யாத் 12 : 12)
2. பஸ்கா ஆட்டுக்குட்டி - ஒரு வயது (யாத். 12 : 5)
3. பஸ்கா ஆட்டுக்குட்டி - ஆண் (யாத். 12 : 5)
4. சங்காரத் தூதன் - அதம் பண்ணுகிறவன் (யாத். 12 : 23)

**IV** *கோடிட்ட இடங்களை நிரப்புக :* (1 Mark)

1. இஸ்ரவேல் சபையார், முதலாம் மாதம் ____________ தேதி பஸ்கா ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்தார்கள்.
2. முதற்பேறானவற்றை அழிக்கும்படியாக ____________ நடுராத்திரியிலே எகிப்து தேசத்திற்கு வந்தான்.
3. எகிப்திலிருந்து பிள்ளைகள் தவிர ____________ புருஷர்கள் புறப்பட்டார்கள்.

*விடைகள்*

*1. பத்தாம் (யாத். 12 : 3)*
*2. சங்காரக்காரன் (யாத். 12 : 23)*
*3. ஆறுலட்சம் (யாத். 12 : 37)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. இஸ்ரவேலர் ஒரு வீட்டிற்கு எத்தனை ஆட்டுக்குட்டிகளை தெரிந்தெடுத்தார்கள்?
   ஒன்று *(யாத். 12 : 3)*

2. தெரிந்து கொள்ளப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியை எத்தனை நாள் வைத்திருந்தார்கள்?
   நான்கு *(யாத். 12 : 6)*

3. பிசைந்தமா புளிக்குமுன் எகிப்தை விட்டுப் புறப்பட்டவர்கள் யார்?
   இஸ்ரவேலர் *(யாத். 12 : 34)*

**VI** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*** : (1 Mark)

1. இஸ்ரவேலர் பஸ்காவை எப்பொழுது ஆசரித்தார்கள்?
முதலாம் மாதம் பதினாலாம் தேதி (யாத். 12 : 6)

2. சங்காரக்காரன் எகிப்து தேசத்தின் மேல் ஏன் வந்தான்?
எகிப்தியரின் முதற்பேறானவற்றை அழிக்கும்படி வந்தான் (யாத். 12 : 29)

3. பார்வோன் இஸ்ரவேலரை எப்பொழுது எகிப்திலிருந்து வெளியே போக விட்டான்?
தலைப்பிள்ளை சங்காரத்திற்கு பின்பு போக விட்டான் (யாத். 12 : 31)

4. என்னையும் ஆசீர்வதியுங்கள் என்று மோசேயி.டமும் ஆரோனிடமும் கூறியது யார்?
பார்வோன் (யாத் 12 : 32)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. இஸ்ரவேலர் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை எங்கே தெளித்தார்கள்?
வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்தார்கள். (யாத் . 13 : 7)

2. சங்காரத்தூ.தன் யாருடைய வீடுகளை அதம் பண்ணாமல் கடந்து போனார்?
சங்காரத்தூதன் அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட்டிருந்த இஸ்ரவேலரின் வீடுகளை அதம் பண்ணாமல் கடந்து போனார். (யாத். 13 : 23, 27)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

1. கர்த்தர் பத்தாம் வாதையை எகிப்தின் மேல் அனுப்புவதற்கு முன்பு இஸ்ரவேலர் என்ன செய்தார்கள்? (அல்லது) சங்காரத் தூதனிடமிருந்து தப்பும்படி இஸ்ரவேலர் என்ன செய்தார்கள்?
இச்சம்பவம் நடைபெறும் முன்,
1) அன்று சாயங்காலத்தில்தானே இஸ்ரவேலரின் வீடுகள் ஒவ்வொன்றிலும் விசேஷமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டியை அடித்தார்கள்.
2) அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை அவர்களுடைய வீடுகளின் வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்தார்கள். (யாத். 12 : 3, 6, 7)

***************

வகுப்பு : 3

பாடம்-7

# இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தது.

(யாத்திராகமம் 14 : 5 — 31)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யாத்திராகமம் 15 : 13

நீர் மீட்டுக் கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழி நடத்தினீர்.

**II** *போதனை* : (2 Marks)

நாம் கர்த்தரை விசுவாசித்து அவரைப் பின்பற்றும்போது, அதிசயிக்கத்தக்க விதத்தில் அவர் தடைகளை அகற்றி நம்மை வழி நடத்துகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. பார்வோன் - எகிப்தின் ராஜா (யாத். 14 : 8)
2. மோசே - கர்த்தருடைய ஊழியக்காரன் (யாத் 14 : 31)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ____________________ பலத்த கையுடன் எகிப்தை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள்.
2. இஸ்ரவேலர் ____________________ அருகில் வந்ததும் பார்வோனும் அவனுடைய சேனைகளும் அவர்களை பின் தொடர்ந்தார்கள்.
3. ____________________ உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்.
4. கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் கர்த்தர் ______________ கலங்கடித்தார்.
5. கர்த்தர் எகிப்தியரை கடலின் நடுவே ______________ போட்டார்.

*விடைகள்*

*1. இஸ்ரவேல் புத்திரர் (யாத். 14 : 8) 3. கர்த்தர் (யாத். 14 : 14)*
*2. சிவந்த சமுத்திரத்தின்(யாத். 14 : 9) 4. எகிப்தியரின் சேனையை (யாத். 14 : 24)*
*5. கவிழ்த்து (யாத் 14 : 27)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. பார்வோன் எத்தனை இரதங்களோடு இஸ்ரவேலரைப் பின் தொடர்ந்தான்?
   அறுநூறு *(யாத். 14 : 7)*
2. இஸ்ரவேலருக்கு இரவை வெளிச்சமாக்கியது எது?
   மேகஸ்தம்பம் *(யாத். 14 : 20)*
3. இஸ்ரவேல் புத்திரரின் வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் மதிலாக நின்றது எது?
   சிவந்த சமுத்திரம் *(யாத். 14 : 22)*
4. சிவந்த சமுத்திரத்தைக் கடந்து போனவர்கள் யார்?
   இஸ்ரவேலர் *.(யாத். 14 : 29)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. பார்வோனும் அவனுடைய சேனைகளும் இஸ்ரவேல் புத்திரரை ஏன் பின் தொடர்ந்தார்கள்?
   இஸ்ரவேல் புத்திரரைத் திரும்ப எகிப்துக்குக் கொண்டு போகும்படியாக பின் தொடர்ந்தார்கள். (யாத் 14 : 5)
2. எகிப்தியரின் சேனை இஸ்ரவேலரை பின்தொடர்ந்த போது, இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் என்ன செய்தார்?
   தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார். (யாத் 14 : 19)
3. எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகளை பிரித்தது எது?
   மேகஸ்தம்பம் (யாத் 14 : 20)

4. கர்த்தர் எங்கேயிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்களைக் கலங்கடித்தார்?
அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து பார்த்து, கலங்கடித்தார். (யாத் 14 : 24)

**VII** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி* : (2 Marks)

1. இஸ்ரவேலர் எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு என்ன செய்தார்கள்?
   1) மிகவும் பயந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.
   2) மோசேயிடம் முறுமுறுக்க ஆரம்பித்தனர். (யாத். 14 : 10-12)

2. கர்த்தர் சிவந்த சமுத்திரத்தை எவ்வாறு பிரித்தார்?
   1) மோசே தன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டினான்.
   2)அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ் காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதைப் பிரித்தார். (யாத். 14 : 21)

3. இஸ்ரவேலர் சமுத்திரத்தை எவ்வாறு கடந்தார்கள்?
   1) இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்.
   2) அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. (யாத். 14 : 22)

4. கர்த்தர் எகிப்தியரை எவ்வாறு கலங்கடித்தார்?
   அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணி, கலங்கடித்தார். (யாத். 14 : 25)

5. இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தை கடந்த பின்னர், கர்த்தர் மோசேயிடம் என்ன சொன்னார்?
   கர்த்தர் மோசேயிடம், "ஜலம் எகிப்தியர் மேலும், அவர்களுடைய இரதங்கள் மேலும் அவர்களுடைய குதிரை வீரர் மேலும் திரும்பும்படிக்கு உன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார். (யாத். 14 : 26)

6. கர்த்தர் எகிப்தியரில் செய்த மகத்தான கிரியையை கண்டவர்கள் யார்? அப்பொழுது அவர்கள் என்ன செய்தார்கள்?
   1. இஸ்ரவேலர் கண்டார்கள்.
   2. அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்.(யாத். 14 : 31)

**VIII** *சுருக்கமான விடையளி*: (4 Marks)

1. ஜனங்கள் பார்வோனையும், அவன் சேனையையும் கண்டு பயந்து, முறுமுறுத்தபோது, மோசே அவர்களை எவ்வாறு தைரியப்படுத்தினான்?
   மோசே ஜனங்களை நோக்கி,
   1) பயப்படாதிருங்கள்.
   2) நீங்கள் நின்றுக்கொண்டு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்.
   3) இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.
   4) கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். (யாத். 14 : 13, 14

2. எகிப்தின் சேனைக்கு தப்பும்படி கர்த்தர் இஸ்ரவேலருக்கு கொடுத்த பாதுகாப்பு என்ன?
   1) இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்.
   2) அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது.
   3) மேகஸ்தம்பம் எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் சேராதபடி அவைகள் நடுவில் வந்தது.
   4) எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது.
   5) இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று. (யாத். 14 : 19, 20)

3. இஸ்ரவேலரை பின்தொடர்ந்த எகிப்தியர் எவ்வாறு மாண்டு போயினர்?
   1) மோசே கர்த்தரின் கட்டளையின்படி, தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான்.
   2) விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வந்தது.
   3) எகிப்தியர் அதற்கு எதிராக ஒடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழத்துப் போட்டார்.
   4) ஜலம் இரதங்களையும், குதிரை வீரரையும், பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது. ஒருவனாகிலும் தப்பவில்லை. (யாத்.14:27, 28)

***************

வகுப்பு : 3

பாடம்-8

# மாராவின் தண்ணீர்

(யாத்திராகமம் 15 : 22 - 27)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)
யாத்திராகமம் 23 : 25

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.

**II** *போதனை* : (2 Marks)

தேவன் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காகக் கசப்பான தண்ணீரை மதுரமாய் மாற்றியது போல, கர்த்தராகிய இயேசு நம்முடைய கசப்பான அனுபவங்கள் யாவற்றையும் நமக்கு இனிமையாக மாற்றுகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** கர்த்தர் | - | பரிகாரி | (யாத் 15 : 26) |
| **2.** சூர் | - | வனாந்தரம் | (யாத். 15 : 22) |
| **3.** மாரா | - | கசப்பான தண்ணீர் | (யாத். 15 : 23) |
| **4.** ஏலிம் | - | பன்னிரண்டு நீரூற்று | (யாத். 15 : 27) |
| **5.** ஏலிம் | - | எழுபது பேரிச்சமரம் | (யாத் 15 : 27) |

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** இஸ்ரவேல் ஜனங்கள் __________________ வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்.

**2.** _________________ தண்ணீர் கசப்பாயிருந்தது.
.
**3.** இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் கசப்பாய் இருந்த இடத்திற்கு __________________ என்று பேரிட்டார்கள்.

*விடைகள்*
*1. சூர் வனாந்தரம் (யாத். 15 : 22)    3. மாரா (யாத். 15 : 23)*
*2. மாராவின் (யாத். 15 : 23*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

**1.** இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் கிடையாமல் எத்தனை நாள் வனாந்தரத்தில் நடந்தார்கள்?
மூன்று *(யாத். 15 : 22)*

**2.** இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் கசப்பாயிருந்தபடியால் யாருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்?
மோசேக்கு *(யாத். 15 : 24)*

**3.** இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெய்வீக சுகத்தின் வாக்குதத்தம் எந்த இடத்தில் அருளப்பட்டது?
மாரா *(யாத். 15 : 26)*

**VI** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*** : (1 Mark)

1. ஏலிமில் எத்தனை நீரூற்றுகள் இருந்தது?
   ஏலிமில் பன்னிரண்டு நீரூற்றுகள் இருந்தது. (யாத். 15 : 27)

2. ஏலிமில் எத்தனை பேரீச்சமரம் இருந்தது?
   ஏலிமில் எழுபது பேரீச்சமரம் இருந்தது. (யாத் 15 : 27)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. இஸ்ரவேல் ஜனங்கள் மாராவிற்கு வந்தபோது அதின் தண்ணீர் எவ்வாறிருந்தது?
   மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்தது. அதைக் குடிக்க அவர்களுக்கு கூடாதிருந்தது. .(யாத். 15 : 23)

2. மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்தபடியால் ஜனங்கள் என்ன செய்தார்கள்? மோசே என்ன செய்தான்?
   *a.* ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்.
   *b.* மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். (யாத். 15 : 24, 25)

3. மாராவின் தண்ணீர் எவ்வாறு மதுரமாயிற்று?
   கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே அது மதுரமான தண்ணீராயிற்று. (யாத் . 15 : 25)

4. மாராவைக் கடந்த பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் எங்கே பாளயமிறங்கினார்கள்?
   இஸ்ரவேல் ஜனங்கள் ஏலிமுக்கு வந்தார்கள். அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது, அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள். (யாத்.15 : 27)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

1. தெய்வீக சுகத்தை அனுபவிக்கும்படி நாம் என்ன செய்ய வேண்டும்?
   *a.* கர்த்தரின் சத்தத்தைக் கவனமாக கேட்க வேண்டும்.
   *b.* அவர் பார்வைக்குச் செம்மையானவையைச் செய்ய வேண்டும்.
   *c.* அவர் கட்டளைக்குச் செவிக்கொடுக்க வேண்டும்.
   *d.* அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொள்ள வேண்டும். (யாத்15:26)

2. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அளித்த தெய்வீக சுகத்தின் வாக்குத்தத்தம் என்ன?
   நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை கவனமாய்க கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்.15:26)

***************

# இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவினால் போஷிக்கப்பட்டது

(யாத்திராகமம் அதி. 16)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம் 84 : 11

தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.

சங்கீதம் 107 : 8, 9

தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று,

அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக,

**II** *போதனை :* (2 Marks)

கர்த்தர் தம் பிள்ளைகளை வனாந்தரத்திலும் போஷித்துக் காப்பாற்றுகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. மன்னா | - | கர்த்தர் கொடுத்த அப்பம் | (யாத் 16 : 15) |
| 2. மன்னா | - | வெண்மை நிறம் | (யாத். 16 : 31) |
| 3. மன்னா | - | கொத்துமல்லி அளவு | (யாத். 16 : 31) |
| 4. ஏழாம் நாள் | - | ஓய்வுநாள் | (யாத். 16 : 30) |
| 5. சீன் | - | வானந்தரம் | (யாத். 16 : 1) |

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. இஸ்ரவேல் புத்திரர் ஏலிமைவிட்டுப் புறப்பட்டு __________________ வனாந்தரத்திற்கு வந்தார்கள்.

2. இஸ்ரவேல் புத்திரருக்கு சீன் வனாந்தரத்தில் __________________ இல்லாமற்போயிற்று.
.
3. இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் ஒரு __________________ அளவு மன்னாவை எடுத்துக்கொண்டார்கள்.

4. மன்னா __________________ அளவாயும் __________________ நிறமாயும் இருந்தது.

5. மன்னாவின் ருசி __________________ ஒப்பாயிருந்தது.

| *விடைகள்* | |
|---|---|
| *1. சீன் (யாத். 16 : 1)* | *4. கொத்துமல்லி, வெண்மை (யாத். 16 : 31)* |
| *2. ஆகாரம் (யாத். 16 : 3)* | *5. தேனிட்டபணிகாரத்திற்கு (யாத். 16 : 31)* |
| *3. ஓமர் (யாத். 16 : 16)* | |

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. காடைகள் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்தை எப்போது மூடிக்கொண்டது?
   சாயங்காலத்தில் *(யாத். 16 : 13)*
2. விடியற்காலைதோறும் இஸ்ரவேல் புத்திரர் எதைச் சேர்த்தார்கள்?
   மன்னா *.(யாத். 16 : 21)*

3. ஆறாம்நாளில் இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் எவ்வளவு மன்னாவைச் சேர்த்தார்கள்?

இரண்டு ஓமர் . *(யாத். 16 : 22)*

**VI** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*** : (1 Mark)

1. மன்னா எப்போது உருகிப்போயிற்று?

வெய்யில் ஏறஏற அது உருகிப்போயிற்று. (யாத். 16 : 21)

2. மன்னா "கர்த்தர் புசிக்க கொடுத்த அப்பம்" என்று இஸ்ரவேலரிடம் கூறியது யார்?

மோசே (யாத் 16 : 15)

3. ஏழாம் நாளில் எவ்வளவு மன்னா கிடைத்தது?

ஒன்றும் கிடைக்கவில்லை. (யாத். 16 : 27)

4. வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்ததை கண்ட இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு என்ன பேரிட்டார்கள்?

மன்னா (யாத். 16 : 14, 31)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. இஸ்ரவேல் புத்திரர் சீன் வனாந்தரத்திற்கு எப்போது வந்தார்கள்?

இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதி வந்தார்கள் (யாத். 16 : 1)

2. இஸ்ரவேலர் சீன் வனாந்தரத்திற்கு வந்தபோது அவர்களுக்கு என்ன சம்பவித்தது? அப்பொழுது அவர்கள் என்ன செய்தார்கள்?

*(i)* அவர்களுக்கு ஆகாரமில்லாமற்போயிற்று.

*(ii)* அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள்.(யாத்.16:1,2)

3. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்த ஆகாரம் என்ன?

விடியற்காலையில் மன்னாவையும், சாயங்காலத்தில் காடைகளையும் கொடுத்தார். (யாத்.16 :13,14)

4. இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா எங்கு எப்போது கிடைத்தது?

விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றிப் பெய்திருந்த பனி நீங்கினபின், மன்னா வனாந்தரத்தின் தரையின் மேல் கிடந்தது. (யாத். 16 : 14)

5. இஸ்ரவேலர் எவ்வளவு மன்னாவை எடுத்தார்கள்?

தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக்கொண்டார்கள். ஆறாம்நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதம் எடுத்தார்கள். (யாத். 16 : 16, 22)

6. ஆறாம் நாளில் இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் இரண்டு ஓமர் அளவு மன்னாவை ஏன் சேர்த்தார்கள்?

ஏழாம் நாள் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாள். அதிலே மன்னா உண்டாயிராது. (யாத் 16 : 25, 26)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

1. மன்னாவின் அளவு, நிறம், ருசி யாவை?

மன்னா கொத்துமல்லி அளவாயும், வெண்மை நிறமாயும் இருந்தது. அதின் ருசி தேனிட்டபணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது. (யாத் 16: 13)

*************

வகுப்பு : 3

பாடம்-10

# ரெவிதீமில் இஸ்ரவேலர்

(யாத்திராகமம் அதி. 17)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

சங்கீதம்18 : 29

உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

**II** *போதனை* : (2 Marks)

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை விசாரிக்கிறவராயிருந்து அவர்களுடைய யுத்தங்களிலெல்லாம் அவர்களுக்கு ஜெயத்தைத்தருகிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. யேகோவாநிசி - கர்த்தர் என் கொடி (பாடத்திட்டம்)
2. யேகோவாநிசி - பலிபீடம் (யாத். 17 : 15)
3. ஓரேப் - கன்மலை (யாத். 17 : 6)
4. ரெவிதீம் - மாசா (யாத். 17 : 7)
5. ரெவிதீம் - மேரிபா (யாத். 17 : 7)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. __________________ ல் இஸ்ரவேல் புத்திரர் மோசேயுடன் தண்ணீருக்காக வாதாடினர்.

2. __________________ வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள்.
.
3. __________________ அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.

*விடைகள்*

*1. ரெவிதீமில் (யாத். 17: 1, 2) 3. யோசுவா (யாத். 17 : 13)*
*2. அமலேக்கியர் (யாத். 17 : 8)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. அமலேக்கியரோடே யுத்தம் பண்ணும்படி மோசே யாரை அனுப்பினான்?
   யோசுவா *(யாத். 17 :9)*

2. மோசேயின் கைகள் அசந்து போனபோது, அவன் கைகளை தாங்கினது யார்?
   ஆரோனும் ஊரும் *(யாத். 17 : 12)*

3. மோசே தான் கட்டின பலிபீடத்திற்கு என்ன பேரிட்டான்?
   யேகோவாநிசி *(யாத். 17 : 15)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. அமலேக்கியர் இஸ்ரவேலரோடு எங்கு யுத்தம் பண்ணினார்கள்?
   ரெவிதீமிலே யுத்தம் பண்ணினார்கள். (யாத். 17 : 8)

2. அமலேக்கியர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினபோது தேவனுடைய கோலை பிடித்துக்கொண்டு மலையுச்சிக்கு சென்றது யார்?
மோசே (யாத் 17 : 9)

3. அமலேக்கியர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினபோது, மோசேயோடுகூட மலை உச்சிக்கு ஏறினவர்கள் யார்?
ஆரோனும் ஊரும் (யாத். 17 : 10)

4. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் எவ்வாறு முறியடித்தான்?
பட்டயக்கருக்கினால் முறியடித்தான். (யாத். 17 : 13)

5. அமலேக்கின் கை யாருக்கு விரோதமாக இருக்கிறது?
கர்த்தருடைய சிங்காசனத்திற்கு விரோதமாக இருக்கிறது. (யாத். 17 : 16)

## VII ஓரிரு வாக்கிய□களில் விடையளி : (2 Marks)

1. இஸ்ரவேல் புத்திரர் ரெவிதீமிற்கு வந்த போது என்ன நடந்தது?
ஜனங்களுக்கு குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. தண்ணீருக்காக மோசேயோடு வாதாடினார்கள். (யாத். 17 : 1, 2)

2. ரெவிதீமிற்கு வழங்கப்பட்ட மறுபெயர்கள் யாவை?
மாசா, மேரிபா (யாத். 17 : 7)

3. ரெவிதீம் மாசா என்றும் மேரிபா என்றும் அழைக்கப்பட காரணம் என்ன?
   a. இஸ்ரவேல் புத்திரர் தண்ணீருக்காக வாதாடினதினிமித்தமும்
   b. கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அவ்வாறு அழைக்கப்பட்டது. (யாத். 17 : 7)

4. இஸ்ரவேலர் அமலேக்கியரை எப்போது மேற்கொண்டார்கள்?
மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள். (யாத்17:11)

5. அமலேக்கியர் இஸ்ரவேலரை எப்போது மேற்கொண்டார்கள்?
மோசே தன் கையைத் தாழவிடுகையில் அமலேக்கு மேற்கொண்டான். (யாத். 17 : 11)

6. மோசேயின் கைகள் அசந்துபோனபோது, ஆரோனும் ஊரும் என்ன செய்தார்ககள்?
   *(i)* ஒரு கல்லைக்கொண்டு வந்து மோசேயின் கீழே வைத்தார்கள். அதின்மேல் உட்கார்ந்தான்.
   *(ii)* ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறுபக்கத்திலும் இருந்து அவன் கைகளைத் தாங்கினார்கள். (யாத் 17 : 12)

7. அமலேக்கியரைத் தோற்கடித்தபின்பு மோசே என்ன செய்தான்?
மோசே ஒரு பலிபீடத்தைக்கட்டி அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டான்.(யாத்.17:15)

8. மோசே கர்த்தருக்கு கட்டின பலிபீடத்திற்கு என்ன பேரிட்டான்? அதின் அர்த்தம் என்ன?
   *(i)* யேகோவாநிசி (யாத். 17 : 15)
   *(ii)* கர்த்தர் என் கொடி. (பாடத்திட்டம்)

9. தலைமுறை தலைமுறைதோறும் கர்த்தரின் யுத்தம் யாருக்கு விரோதமாக நடக்கும்? ஏன்?
   *(i)* அமலேக்கிற்கு விரோதமாக நடக்கும்.
   *(ii)* அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்த படியால், யுத்தம் நடக்கும். (யாத். 17 : 16)

## VIII சுருக்கமான விடையளி: (4 Marks)

1. இஸ்ரவேல் புத்திரர் மோசேயுடன் தண்ணீருக்காக வாதாடினபோது, கர்த்தர் மோசேக்குக் கொடுத்த ஆலோசனை என்ன?
கர்த்தர் மோசேயை நோக்கி, “நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு,

ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன். நீ அந்த கன்மலையை அடி, அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்'' என்றார். அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். (யாத் 17 : 5,6)

2. இஸ்ரவேலர் அமலேக்கியரை எவ்வாறு முறிய அடித்தார்கள்?
மோசே மலையுச்சியின் மேல் ஏறி தன் கையை ஏறெடுத்திருந்தான். அவன் கைகள் அசந்துபோகையில் ஆரோனும் ஊரும் அவன் கைகளைத் தாங்கினார்கள். யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான்.(யாத்.17:11-13)

***************

வகுப்பு : 3

பாடம்-11

# கர்த்தராகிய இயேசு லேகியோனைத் துரத்தியது

(லூாக்கா 8 : 26 – 35)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யோவான் 8 : 36

ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

எபேசியர் 6 : 11

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்.

**II** *போதனை* : (2 Marks)

ஒரு மனுஷன் அநேக பிசாசுகளினால் பல வருடங்கள் கட்டப்பட்டிருந்தாலும், அவன் கர்த்தராகிய இயேசுவிடத்தில் வருவானாயின் பூரண விடுதலையை அனுபவிக்கலாம்.

**III** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** இயேசு | - | உன்னதமான தேவனுடைய குமாரன் | (லூாக். 8 : 28) |
| **2.** லேகியோன் | - | அநேகம் பிசாசுகள் | (லூாக். 8 : 30) |
| **3.** வஸ்திரந்தரியாதவன் | - | பிசாசு பிடித்தவன் | (லூாக். 8 : 27) |
| **4.** பிசாசு | - | வனாந்தரங்களுக்கு துரத்துகிறவன் | (லூாக். 8 : 29 |

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** நெடுநாளாய்ப் பிசாசுகள் பிடித்தவன் ___________________க் கண்டபோது கூக்குரலிட்டு அவருக்கு முன்பாக விழுந்தான்.

**2.** பிசாசுகள் தங்களைப் ___________________ போகக் கட்டளையிடாதபடிக்கு இயேசுவை வேண்டிக்கொண்டன.

**3.** பிசாசுகள் அந்த மனுஷனை விட்டு நீங்கி ___________________ புகுந்தன.

*விடைகள்*

*1. இயேசுவை (லூாக். 8 : 28)* *3. பன்றிகளுக்குள் (லூாக். 8 : 33)*
*2. பாதாளத்திலே (லூாக்.8 : 31)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

**1.** லேகியோன் என்னும் பிசாசுபிடித்திருந்த மனுஷன் எந்த நாட்டில் வசித்து வந்தான்?
கதரேனருடைய நாட்டில் *(லூாக். 8: 26,27)*

**2.** பிசாசுகள் தங்களிடம் பாதாளத்திற்கு போகக்கட்டளையிடாதபடிக்கு யாரிடம் வேண்டிக் கொண்டன?
இயேசுவிடம் *(லூாக். 8 : 31)*

**3.** கதரேனருடைய நாட்டிலிருந்த பிசாசுபிடித்த மனுஷன் பிசாசுகள் நீங்கினபின் எங்கே உட்கார்ந்திருந்தான்?
இயேசுவின் பாதத்தருகே *(லூாக். 8 : 35)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

**1.** அநேகம் பிசாசுகள் பிடித்திருந்த மனுஷன் எங்கே தங்கியிருந்தான்?
பிரேதக் கல்லறைகளில் தங்கியிருந்தான். (லூாக். 8 : 27)

2. கர்த்தராகிய இயேசு பிசாசுபிடித்திருந்த மனுஷனிடம் உன் பேர் என்ன என்று கேட்டபொழுது அவன் என்ன சொன்னான்? ஏன்?
அநேக பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் லேகியோன் என்று சொன்னான். (லூக். 8 : 30)

3. பிசாசுகள் எங்கே போகும்படி தங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று இயேசுவிடம் வேண்டிக் கொண்டது?
பன்றிகளுக்குள். (லூக். 8 : 32)

4. பன்றிகள் எங்கே மேய்ந்து கொண்டிருந்தது?
மலையில் (லூக். 8 : 32)

5. பிசாசுகள் பன்றிகளுக்குள் புகுந்தபோது அவைகள் என்ன செய்தது?
உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, அமிழ்ந்து, மாண்டது. (லூக். 8 : 33)

6. பிசாசுகள் இயேசுவை யார் என்று அறிக்கையிட்டது?
உன்னதமான தேவனுடைய குமாரன். (லூக். 8 : 28)

**VII** *__ஓரிரு வாக்கிய□களில் விடையளி__* : (2 Marks)

1. கதரேனருடைய நாட்டில் வசித்துவந்த பிசாசுபிடித்திருந்த மனுஷன் எப்படிப்பட்டவனாயிருந்தான்?
வஸ்திரந்தரியாதவனும், வீட்டில் தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்குகிறவனாயும் இருந்தான். (லூக். 8 : 27)

2. கதரேனருடைய நாட்டில் வசித்துவந்த மனுஷனை பிடித்த பிசாசுகள் அவனை எங்கே துரத்தினது?
அவன் சங்கிலிகளினாலும் விலங்குகளினாலும் கட்டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும், கட்டுகளை முறித்துப் போட்டு அவனை வனாந்தரங்களுக்குத் துரத்தினது. (லூக். 8 : 29)

3. பிசாசுகள் கர்த்தராகிய இயேசுவிடம் என்ன வேண்டிக்கொண்டது?
பிசாசுகள் தங்களைப் பாதாளத்திற்கு அனுப்பவேண்டாம் என்றும், மலையிலே மேய்ந்து கொண்டிருந்த பன்றிக்கூட்டத்திற்குள் அனுப்பும்படியும் வேண்டிக்கொண்டது. (லூக். 8 : 31,32)

4. பிசாசுகள் கதரேனருடைய நாட்டில் வசித்து வந்த மனுஷனைவிட்டு நீங்கி என்ன செய்தது?
பன்றிகளுக்குள் புகுந்தன. அப்பன்றிக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்து மாண்டது. (லூக். 8 : 33)

5. இயேசுவினிடத்தில் வந்து, பிசாசுகள் விட்டுப்போன மனுஷன் என்ன செய்தான்?
புத்தி தெளிவடைந்து, வஸ்திரந்தரித்தவனாய்க் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்தான். (லூக். 8 : 35)

**VIII** *__சுருக்கமான விடையளி__*: (4 Marks)

1. கதரேனருடைய நாட்டில் வசித்துவந்த பிசாசுகள் பிடிந்திருந்த மனுஷன் இயேசுவைக் கண்டபோது என்ன செய்தான்?
அவன் இயேசுவைக் கண்டபோது கூக்குரலிட்டு, அவருக்கு முன்பாக விழுந்து, “இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்” என்று மகா சத்தத்தோடே சொன்னான். (லூக். 8 : 28)

**************

# யவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்பட்டது

(லூக்கா 8 : 41, 42, 49 - 56)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யோவான் 11 : 25

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

**II** *போதனை* : (2 Marks)

கர்த்தர் சகலவித வியாதிகளையும் சுகமாக்கக் கூடியவராயிருப்பது மட்டுமல்லாமல், மரித்தோரையும் எழுப்பக்கூடியவராயிருக்கிறார்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு - போதகர் (லூக். 8 : 49)
2. யவீரு - ஜெப ஆலயத்தலைவன் (லூக். 8 : 41)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________ஒரு ஜெப ஆலயத்தலைவனாயிருந்தான்.
2. ________________ இயேசுவை தன் வீட்டிற்கு வரும்படி வேண்டிக்கொண்டான்.
3. இயேசு யவீருவின் மகளுக்கு ________________ கொடுக்கக் கட்டளையிட்டார்.

*விடைகள்*

*1. யவீரு (லூக். 8 : 41) 3. ஆகாரம் (லூக். 8 : 55)*

*2. யவீரு (லூக்.8 : 42)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. யவீருவின் மகளுக்கு எத்தனை வயதாயிருக்கும்போது மரித்துப்போனாள்?
   பன்னிரண்டு *(லூக். 8 : 41)*

2. யாருடைய கையைப் பிடித்து பிள்ளையே எழுந்திரு என்று இயேசு சொன்னார்?
   யவீருவின் மகள் *(லூக். 8 : 54)*

**VI** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி*: (2 Marks)

1. யவீருவின் மகள் வியாதிப்பட்டபோது அவன் என்ன செய்தான்?
   அவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான். (லூக். 8 : 41, 42)
2. யவீரு இயேசுவை ஏன் தன் வீட்டிற்கு அழைத்தான்?
   பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், இயேசுவை தன் வீட்டிற்கு அழைத்தான். (லூக். 8 : 41, 42)
3. ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் வீட்டிலிருந்து வந்தவன் அவனிடம் என்ன சொன்னான்?
   உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள். போதகரை வருத்தப்படுத்தவேண்டாம். என்றான். (லூக். 8 : 49)

4. யவீருவின் குமாரத்தி மரித்துப் போனாள் என்று கேள்விப்பட்டபோது, இயேசு யவீருவிடம் என்ன சொன்னார்?

இயேசு யவீருவிடம், "பயப்படாதே விசுவாசமுள்ளவனாயிரு. அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்" என்றார். (லூக். 8 : 50)

5. இயேசு யாரை யவீருவின் மரித்த மகள் கிடத்தப்பட்டிருந்த இடத்தில் இருக்கும்படி கட்டளையிட்டார்?

பேதுருவையும், யாக்கோப்பையும், யோவானையும், பெண்ணின் தகப்பனையும், தாயையும் மாத்திரம் இருக்கும்படி கட்டளையிட்டார். (லூக். 8 : 51)

6. யவீருவின் மரித்துப்போன மகளுக்காக அழுது கொண்டிருந்தவர்களிடம் இயேசு என்ன சொன்னார்?

"அழாதேயுங்கள் அவள் மரித்துப் போகவில்லை. நித்திரையாயிருக்கிறாள்" என்றார். (லூக். 8 : 52)

7. இயேசு யவீருவின் மகளை உயிரோடே எழுப்பின பின்பு அவளுடைய தாய் தகப்பன்மாரிடம் என்ன சொன்னார்?

நடந்ததை ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி கட்டளையிட்டார். (லூக். 8 : 56)

**VII** *<u>சுருக்கமான விடையளி</u>*: (2 Marks)

1. யவீருவீன் வீட்டில் அழுதுகொண்டிருந்தவர்கள் யாரைப்பார்த்து நகைத்தார்கள்? ஏன்?

   (i) இயேசுவைப் பார்த்து நகைத்தார்கள்.
   (ii) இயேசு அவர்களிடம், "அழாதேயுங்கள். யவீருவின் மகள் மரித்துப் போகவில்லை. நித்திரையடைந்திருக்கிறாள்" என்றார். அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்ததினால் அவரைப் பார்த்து நகைத்தார்கள். (லூக். 8 : 52, 53)

2. இயேசு யவீருவின் மகளை எவ்வாறு உயிரோடெழுப்பினார்?

இயேசு எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து, "பிள்ளையே எழுந்திரு" என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்பவந்தது. உடனே அவள் எழுந்திருந்தாள். (லூக். 8 : 54,55)

***************

வகுப்பு : 3

பாடம்-13

# யோவான்ஸ்நானனின் மரணம்

(மாற்கு 6 : 17 - 29)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

எபிரேயர் 12 : 4

பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

**II** *போதனை* : (2 Marks)

பாவத்தை எதிர்த்து நிற்பதில் நாம் நம் ஜீவனை இழக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. யோவான் - நீதியுள்ளவன் (மாற் 6 : 20)
2. யோவான் - பரிசுத்தமுள்ளவன் (மாற் 6 : 20)
3. பிலிப்பு - ஏரோதின் சகோதரன் (மாற் 6 : 17)
4. ஏரோதியாள் - பிலிப்புவின் மனைவி (மாற் 6 : 17)
5. ஏரோது ராஜா - துன்மார்க்கன் (பாடத்திட்டம்)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________ ஏரோதின் பாவத்தை அவனுக்கு சுட்டிக்காட்டினான்.
2. ________________ யோவான்ஸ்நானனைக் கொன்று போட மனதாயிருந்தாள்.
3. ________________ தன் ஜென்மநாளிலே பெரிய விருந்து செய்தான்.
4. ________________ தன் தாயினுடைய ஆலோசனையின்படி யோவான்ஸ்நானகனின் தலையைக் கேட்டாள்.

*விடைகள்*

*1. யோவான்ஸ்நானகன் (மாற் 6 : 18)* *3. ஏரோது ராஜா (மாற் 6 : 21)*
*2. ஏரோதியாள் (மாற் 6 : 19)* *4. ஏரோதியாளின் குமாரத்தி (மாற் 6 : 21)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. யோவான்ஸ்நானனைக் காவலில் வைத்தது யார்?
   ஏரோது *(மாற் 6 : 18)*
2. விருப்பத்தோடே யோவான்ஸ்நானனின் சொல்லைக் கேட்டு வந்தது யார்?
   ஏரோது ராஜா *(மாற் 6 : 20)*
3. சபை நடுவே வந்து நடனம் பண்ணியது யார்?
   ஏரோதியாளின் குமாரத்தி *(மாற் 6 : 22)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. நீதியும் பரிசுத்தமுள்ளவனென்று ஏரோது யாரைக்குறித்து அறிந்திருந்தான்?
   யோவான்ஸ்நானகனை அறிந்திருந்தான். (மாற் 6 : 20)
2. யோவான்ஸ்நானனின் தலையை ஏரோதிடம் கேட்டது யார்?
   ஏரோதியாளின் குமாரத்தி (மாற் 6 : 2)
3. யோவான்ஸ்நானனின் தலையை கேட்கும்படி சிறுபெண்ணிடம் கூறியது யார்?
   சிறுபெண்ணின் தாயாகிய ஏரோதியாள். (மாற் (6 : 24)
4. சிறுபெண் யோவான்ஸ்நானனின் தலையை கேட்டபோது மிகுந்த துக்கமடைந்தது யார்?
   ஏரோதுராஜா (மாற் 6 : 26)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

1. ஏரோது ராஜா யோவான்ஸ்நானனை ஏன் கட்டி காவலில் வைத்தான்?
   ஏரோது ராஜா ஒரு துன்மார்கனாக இருந்தான். யோவான்ஸ்நானன் அவனுடைய பாவத்தைச் சுட்டிக்காட்டியதால், ஏரோது அவனைக் காவலில் வைத்தான். (மாற் 6 : 17,18)

2. ஏரோது தன் ஜென்மநாளிலே யாருக்கு விருந்து பண்ணினான்?
   பிரபுக்களுக்கும் சேனாதிபதிகளுக்கும் கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினான். (மாற் 6 : 21)

3. ஏரோதை சந்தோஷப்படுத்தியது யார்? எவ்வாறு?
   ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம்பண்ணி, அவனை சந்தோஷப்படுத்தினாள். (மாற் 6 : 22)

4. ஏரோதியாளின் குமாரத்தி தன்னுடைய நடனத்திற்கு பரிசாக ஏரோதிடம் என்ன கேட்டாள்?
   ஒரு தாலத்திலே யோவான்ஸ்நானனின் தலையை தரவேண்டும் என்று கேட்டாள். (மாற் 6 : 25)

5. யோவான்ஸ்நானகனை சிரச்சேதம் செய்த ராஜா யார்? அவன் சரீரத்தை எடுத்து கல்லறையிலே வைத்தது யார்?
   (i) ஏரோது ராஜா
   (ii) யோவான்ஸ்நானனின் சீஷர்கள் (மாற் 6 : 28)

6. ஏரோதியாளின் குமாரத்தி யோவான்ஸ்நானனின் தலையை கேட்டது ஏரோது ராஜாவுக்கு மிகுந்த துக்கமாயிருந்தபோதிலும், அவன் ஏன் அதை மறுக்கவில்லை?
   ஆணையினிமித்தமும், கூடபந்தியிருந்தவர்களினிமித்தமும் அதை மறுக்க அவனுக்கு மனதில்லாமல்போயிற்று. (மாற் 6 : 26)

7. யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் பண்ணப்பட்டான் என்று கேள்விப்பட்டபோது அவனுடைய சீஷர்கள் என்ன செய்தார்கள்?
   அவன் உடலை எடுத்து, ஒரு கல்லறையிலே வைத்தார்கள்.. (மாற் 6 : 29)

**VIII** ***சுருக்கமான விடையளி:*** (4 Marks)

1. ஏரோதியாளால் யோவான்ஸ்நானனை ஏன் கொன்றுபோட முடியவில்லை?

   யோவான் நீதியும் பரிசுத்தமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களை செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டுவந்தான். (மாற் 6 : 20)

2. ஏரோதியாளின் குமாரத்தி நடனமாடி ஏரோதை சந்தோஷப்படுத்தினபடியால் அவன் அவளுக்கு என்ன வாக்குப் பண்ணினான்?

   ராஜா அவளிடம், ‘‘உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், அதை உனக்குத் தருவேன். நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும் அது என் ராஜ்யத்தில் பாதியானாலும் அதை உனக்குத் தருவேன’’ என்றான். (மாற் 6 : 22, 23)

3. ஏரோதியாளின் குமாரத்தி ஏரோது ராஜாவிடம் யோவான்ஸ்நானகனின் தலையைக் கேட்டபோது அவன் என்ன செய்தான்? ஏரோதியாளின் குமாரத்தி என்ன செய்தாள்?

   ஏரோது உடனே யோவான்ஸ்நானகனின் தலையை கொண்டுவரும்படி சேவகனுக்கு கட்டளையிட்டு அனுப்பினான். அந்தப்படி அவன் போய், காவற்கூடத்திலே அவனை சிரத்சேதம்பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே கொண்டு வந்து, அதை அந்த சிறுபெண்ணுக்கு கொடுத்தான். அந்தச் சிறுபெண் அதை தன் தாயினிடத்தில் கொடுத்தாள். (மாற் 6 : 27, 28)

***************

# ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்

(மத்தேயு 14 : 13 - 21 ; யோவான் 6 : 9)

**I** *<u>மனப்பாட வசனம் :</u>* (2 Marks)

<u>லூாக்கா 6 : 38</u>

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள், நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.

**II** *<u>போதனை</u>* : (2 Marks)

அப்பங்களையும் மீன்களையும் வைத்திருந்த சிறுவன் தனக்கிருந்த யாவற்றையும் மற்றவர்களுக்காக மனப்பூர்வமாகக் கொடுத்தான். அது எல்லாருக்கும் பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. நம்மிடத்தில் உள்ளதை நாம் ஆண்டவராகிய இயேசுவிடம் கொடுக்கும்போது அவர் அதை ஏராளமான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக்குகிறார்.

**III** *<u>பொருத்துக :</u>* (1 Mark)

1. இயேசு - மனதுருக்கமுள்ளவர் (மத். 14 : 14))
2. ஐந்து அப்பம் - ஐயாயிரம் பேர் (மத். 14 : 21)
3. இரண்டு மீன்கள் - ஐயாயிரம் பேர் (மத். 14 : 21)
4. இயேசு - அற்புதங்களை செய்கிறவர் (மத். 14 : 21)

**IV** *<u>கோடிட்ட இட□களை நிரப்புக :</u>* (1 Mark)

1. ஜனங்களை __________________ கொள்ளும்படி அனுப்பிவிட வேண்டும் என்று சீஷர்கள் இயேசுவிடம் சொன்னார்கள்.
2. இயேசு ஜனங்களை __________________ மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டார்..
3. இயேசு அப்பங்களைப் பிட்டு _______________ இடத்தில் கொடுத்தார்.

*<u>விடைகள்</u>*
*1. போஜனபதார்த்தங்கள் (மத். 14 : 15) 3. சீஷர்கள் ( மத். 14 : 19)*
*2. புல்லின் (மத். 14 : 19)*

**V** *<u>ஒரே வார்த்தையில் விடை எழுது :</u>* (1 Mark)

1. ஜனங்கள் இயேசுவினிடத்தில் எவ்வாறு வந்தார்கள்?
   கால் நடையாய் *(மத் 14 : 13)*
2. இயேசு ஜனங்களுக்கு போஜனம் கொடுக்கும்படி யாரிடம் கூறினார்?
   சீஷர்களிடம் *(மத் 14 : 16)*
3. மீதியான துணிக்கையை எத்தனை கூடை நிறைய எடுத்தார்கள்?
   பன்னிரட்டு *(மத் 14 : 20)*

**VI** ***ஓரிரு வார்த்தைகளில் விடையளி*** : (1 Mark)

**1.** இயேசு திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள் மேல் மனதுருகி, என்ன செய்தார்?
அவர்களில் வியாதியஸ்தவர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத். 14 : 14)

**2.** சீஷர்கள் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் யாரிடத்திலிருந்து வாங்கி இயேசுவிடம் கொடுத்தார்கள்?
ஒரு சிறுபையனிடமிருந்து வாங்கினார்கள். (யோவான் 6 : 9)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

**1.** யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டான் என்பதைக் கேட்டவுடன் இயேசு என்ன செய்தார்?
இயேசு அதைக் கேட்டு, அவ்விடம்விட்டு, படவில் ஏறி, வனாந்தரமான ஓர் இடத்துக்குத் தனியே போனார். (மத். 14 : 13)

**2.** இயேசு திரளான ஜனங்கள் தம்மிடத்திற்கு வருகிறதைக் கண்டு என்ன செய்தார்?
அவர்கள் மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களை சொஸ்தமாக்கினார். (மத். 14 : 14)

**3.** சாயங்காலமான போது சீஷர்கள் ஜனங்களை எங்கே, எதற்காக அனுப்பிவிடும்படி இயேசுவிடம் கூறினார்கள்?
ஜனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்குப் போஜனபதார்ந்தங்களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பவேண்டும் என்றார்கள். (மத் 14 : 15)

**4.** ஜனங்களை அனுப்பிவிடும்படி சீஷர்கள் இயேசுவிடம் கூறியபோது, அவர் என்ன செய்தார்?
அவர்கள் போக வேண்டுவதில்லை, நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார். (மத். 14 : 16)

**5.** ஐந்து அப்பம் இரண்டு மீன்களைக் கொண்டு இயேசு எத்தனை பேரை போஷித்தார்? மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தார்கள்?
(i) ஸ்திரீக்கும் பிள்ளைக்கும் தவிர, ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்களை போஷித்தார்.
(ii) பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள். (மத். 14 : 20, 21)

**6.** நம்மிடத்தில் உள்ளதை நாம் ஆண்டவராகிய இயேசுவிடம் கொடுக்கும்போது அவர் அதை என்ன செய்வார்?
ஏராளமான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக்குவார். (போதனை)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு ஐந்து அப்பம் இரண்டு மீன்களையும் எடுத்து என்ன செய்தார்?

இயேசு ஜனங்களை புல்லின் மேல் பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார், சீஷர்கள் ஜனங்களுக்கு கொடுத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள். (மத். 14 : 19, 20)

***************

# கர்த்தராகிய இயேசு கடலின் மேல் நடந்தது

(மத்தேயு 14 : 22 - 33)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

யோவான் 14 : 12

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.

**II** *போதனை* : (2 Marks)

கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அவர் செய்த அதே கிரியைகளைச் செய்யக்கூடும்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு - கடலின் மேல் நடந்தவர் (மத். 14 : 26)
2. இயேசு - தேவனுடைய குமாரன் (மத். 14 : 33)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ___________________ தனித்து ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினார்.
2. சீஷர்கள், பிரயாணம் செய்த படவு, ___________________ இருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது.
3. இயேசு ___________________ ஜாமத்திலே கடலின்மேல் நடந்து வந்தார்.
4. ___________________ இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான்.

*விடைகள்*

*1. இயேசு (மத். 14 : 23)*
*2. எதிர்காற்று (மத். 14 : 24)*
*3. நாலாம் ( மத். 14 : 25)*
*4. பேதுரு (மத். 14 : 29)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. இயேசு கடலின்மேல் நடக்கிறதைக் கண்ட சீஷர்கள் என்ன செய்தார்கள்?
   பயத்தினால் அலறினார்கள் *(மத். 14 : 26)*
2. நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்று இயேசுவிடம் கூறியது யார்?
   பேதுரு *(மத் 14 : 28)*
3. யார் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது?
   இயேசு . *(மத். 14 : 32)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி* : (1 Mark)

1. படவு எந்த இடத்தில் சேர்ந்தபோது, அலைகளினால் அலைவுபட்டது?
   நடுக்கடலில் (மத். 14 : 24)
2. கடலின் மேல் நடந்து கொண்டிருந்த பேதுரு எப்போது அமிழ்ந்துபோகத் தொடங்கினான்?
   காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்தபோது அமிழத்தொடங்கினான். (மத். 14 : 30)

3. பேதுரு கடலில் அமிழ்ந்து போகையில் அவனை தூக்கிவிட்டது யார்?
இயேசு (மத். 14 : 31)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி*** : (2 Marks)

1. கர்த்தராகிய இயேசு திரளான ஜனங்களைப் போஷித்தபின் என்ன செய்தார்?
   (i) சீஷர்களை அக்கரைக்குப் போகும்படி துரிதப்படுத்தினார்.
   (ii) அவர் தனித்து ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின் ஏறினார். (மத். 14 : 22-33)

2. சீஷர்கள் பிரயாணம் சென்ற படவுக்கு என்ன நேரிட்டது?
   படவு நடுக்கடலிலே சேர்ந்து எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. (மத். 14 : 24)

3. சீஷர்கள் சென்ற படவு அலைகளினால் அலைவுபட்ட போது இயேசு என்ன செய்தார்?
   இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். (மத்.14 : 26)

4. சீஷர்கள் இயேசு கடலின்மேல் நடக்கிறதைக் கண்டபோது என்ன செய்தார்கள்?
   அவர் கடலின் மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி., பயத்தினால் அலறினார்கள். (மத் 14 : 26)

5. இயேசு கடலின்மேல் நடக்கிறதைக் கண்டு சீஷர்கள் பயந்து அலறியபோது, இயேசு அவர்களிடம் என்ன கூறினார்?
   இயேசு அவர்களிடம் திடன்கொள்ளுங்கள். நான்தான், பயப்படாதிருங்கள் என்றார். (மத். 14 : 27)

6. கடலின் மேல் நடக்க வாஞ்சித்த சீஷன் யார்? அவன் இயேசுவிடம் என்ன கேட்டான்?
   (i) பேதுரு.
   (ii) பேதுரு அவரை நோக்கி, ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். (மத். 14 : 28)

7. பேதுரு கடலில் அமிழ்ந்து போகையில் என்ன செய்தான்?
   ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். (மத். 14 : 30)

8. இயேசு பேதுருவை எவ்வாறு கடிந்து கொண்டார்?
   இயேசு கையை நீட்டி அவனை பிடித்து, அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்று சொல்லி கடிந்து கொண்டார். (மத். 14 : 31)

9. படவில் உள்ளவர்கள் இயேசு கடலின்மேல் நடந்து வந்து படவில் ஏறினதைக் கண்டபோது என்ன செய்தார்கள்?
   மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள். (மத். 14 : 33)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

1. பேதுரு கடலின் மேல் நடந்த சம்பவத்தை எழுது?

   பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர் வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்து போகையில், ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். (மத். 14 : 28 ஷ 31

***************

வகுப்பு : 3

பாடம்16

# கானானிய ஸ்திரீயின் மகள் குணமாக்கப்பட்டது

(மத்தேயு 15:21-28)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

எபிரெயர் 11 : 6

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனேன்றால் தேவனிடத்திதில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவா தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.

**II** *போதனை* : (2 Marks)

தெய்வீக சகம் பிள்ளைகளின் அப்பமாயிருக்கிறது. அதைப் பெற்றுக்கொள்ள நம்மை நாம் தாழ்த்தி, பதில் கிடக்கும்வரைக்கும் விசுவாசத்தோடு. அதைரியப்படாமல் ஜெபம்பண்ண வேண்டும்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு - தாவீதின் குமாரன் (மத். 15 : 22)
2. இஸ்ரவேல் வீட்டார் - காணாமற்போன ஆடுகள் (மத். 15 : 24)
3. தெய்வீக சுகம் - பிள்ளைகளின் அப்பம் (மத். 15 : 24)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்கு போனார்..
2. ________________ னுடைள மகள் பிசாசினால் கொடிய வேதனைப்பட்டாள்.
3. 'பிள்ளைகளின் ________________ எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல' என்று இயேசு சொன்னார்.

*விடைகள்*

*1. இயேசு (மத். 15 : 21)* *3. அப்பம் (மத். 15 : 26)*
*2. கானானிய ஸ்திரீ (மத். 15 : 22)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. ஆண்டவரே தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் உன்று கூப்பிட்ட ஸ்திரீ யார்?
   கானானிய ஸ்திரீ *மத் 15 : 22)*
2. உன் விசுவாசம் பெரிது என்று கானானிய ஸ்திரீயிடம் கூறியது யார்?
   இயேசு *(மத்15:28)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. யாருடைய மகள் பிசாசினால் கொடிய வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்?
   குானானிய ஸ்திரீயிளுடைய மகள். (மத் 15 : 22)
2. கானானிய ஸ்திரீயை அனுப்பிவிடும்படி இயேசுவிடம் கூறியது யார்?
   சீஷர்கள் (மத்15 : 23)
3. காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டது யார்?
   இயேசு. (மத்15 : 24)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி***: (2 Marks)

1. கானானிய ஸ்திரீ இயேசுவிடம் வேண்டிக்கொண்டது என்ன?
ஆண்டவரே, .தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்றாள் (மத் 15 : 22)

2. இயேசு பிரதியுத்தரமாக ஒரு வார்த்தையும் சொல்லாததைக் கண்போது, கானானிய ஸ்திரீ உன்ன செய்தாள்? சீஷர்கள் என்ன செய்தார்கள்?
   i) அவளோ அவரைப் பின் தொடர்ந்து கூப்பிட்டாள்.
   ii) சீஷர்கள் அவளை அனுபபிவிடும்படி இயேசுவிடம் வேண்டிக்கொண்டார்கள். (மத்15 : 23)

3. இனயசு கானானிய ஸ்திரீக்கு உதவி செய்ய மறுத்து முதல் முறை அவளிடம் என்ன சொன்னார்?
இயேசு கானானிய ஸ்திரீயிடம், "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி,மற்றப்படியில்லை என்றார். (மத்15 : 24)

4. இயேசு கானானிய ஸ்திரீக்கு உதவிசெய்ய மறுத்தபோது அவள் என்ன செய்தாள்?
ஆவள் மறுபடியும் வருந்திக்கூப்பிட்டு, "ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். (மத். 15 : 25)

5. இயேசு கானானிய ஸ்திரீக்கு உதவிெய்ய மறுத்து இரண்டாம் முறை அவளிடம் என்ன சொன்னார்?
இயேசு அவளிடம், "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். (மத். 15 : 26)

6. கானானிய ஸ்திரீ தன்னைத் தாழ்த்தி இயேசுவிடம் எவ்வாறு வேண்டிக்கொண்டாள்?
"கானானிய ஸ்திரீ இயேசுவிடம்,"மெய்தான் ஆண்டவரே, ஆகிலும், நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே" என்றார் (மத் 15 : 27)

7. கானானிய ஸ்திரீ தன்னைத்தாழ்த்தின போது இயேசு அவளிடம் என்ன சொன்னார்? (அல்லது) கானானிய ஸ்திரீயின் மகள் எப்போது ஆரோக்கியமானாள்?
இயேசு அவளிடம், "ஸதிரீயே, உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள் (மத்15 : 28)

***************

வகுப்பு : 3

பாடம்-17

# கர்த்தராகிய இயேசு நாலாயிரம் பேரைப் போஷித்தது

(மாற்கு 8 : 1 - 9)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 பேதுரு 3 : 8, 9

மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும் சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து

தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும சரிகட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசிர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.

**II** *போதனை* : (2 Marks)

பசியாயிருந்த ஜனங்கள் மீது கர்த்தராகிய இயேசு மனதுருக்கமுள்ளவராயிருந்து அவர்களைக் போஷீத்தார். நாமுங்கூட கர்த்தராகிய இயேசுவைப் போல் மனதுருக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு - ஜன்ங்களுக்காக பரிதபிக்கிறவர் (மாற். 8 : 2)
2. ஏழு அப்பம் - நாலாயிரம் பேர் (மாற். 8 : 9)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ____________ 'ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்' என்றார்.
2. சீஷர்களிடம் ____________ அப்பங்களும் சில சிறுமீன்குளும் இருந்தன.
3. கர்த்தராகிய இயேசு அப்பங்களை எடுத்து ____________ பண்ணி சீஷர்களிடம் கொடுத்தார்..

*விடைகள்*

*1. இயேசு (மாற். 8 : 2)* *3. ஸ்தோத்திரம் (மாற். 8 : 6)*
*2. ஏழு (மாற். 8 : 5)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. ஜனங்கள் சாப்பிட ஒன்றுமில்லாமல் எத்தனை நாள் இயேசுவோடு தங்கியிருந்தார்கள்?
   முன்று நாள் *(மாற் 8 : 2)*
2. ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்கவேண்டும் என்று விரும்பியது யார்?
   இயேசு *(மாற் 8: 1-3)*
3. சீஷர்களிடம் எத்தனை அப்பங்கள் இருந்தது?
   ஏழு *( மாற் 8:5)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. இயேசு ஏழு அபங்களைக் கொண்டு எத்தனை பேரை போஷித்தார் ?
   ஏறக்ணிகுறைய நாலாயிரம் பேர். (மாற் 8 : 9)

**2.** ஏழு அபங்களைக் கொண்டு நாலாயிரம பேரை போஷித்ததுடன் மீதியான துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய எடுத்தார்கள்?

ஏழு (மாற் 8 : 8)

**VII** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி***: (2 Marks)

**1.** இயேசு ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்கவேண்டும் என்று ஏன் விரும்பினார்?

*a.* ஜனங்கள் பசியாயிருந்தார்கள்

*b.* தூரத்திலிருந்து வந்தவர்கள் வழியில் சோர்ந்து போவார்கள்.

*c.* இயேசு மனதுருக்கமுள்ளவராயிருந்தார் (மாற் 8 : 1-3)

**2.** இயேசு ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்க வேண்டுமென விரும்பிய போது, சீஷர்கள் என்ன சொன்னார்கள்?

அது வனாந்தரமானபடியால் அங்கு ஆகாரம் ஒன்றும் கிடைக்காது என்றுசொன்னார். (மாற்8 : 4)

**3.** இயேசு ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்க விரும்பிய போது சீஷர்களிடம் என்ன இருந்தது?

ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் இருந்தது. (மாற் 8 : 5,7)

**4.** இயேசு சீஷர்களிடமிருந்த ஏழு அப்பங்களையும் சிறுமீன்களையும் எடுத்து என்ன செய்தார்?

இயேசு அவைகளை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பட்டு, ஜனங்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடம் கொடுத்தார். (மாற். 8 : 6)

**VIII** ***சுருக்கமான விடையளி***: (4 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் நாலாயிரம் பேரை எவ்வாறு போஷித்தார்?

கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களிடம் ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் இருந்தது. அவர் அவற்றை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டு, ஜனங்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடம் கொடுத்தார். அவர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். ஏறக்குறைய நாலாயிரம பேர் சாப்பிட்டார்கள். மீதியான துணிக்கைகளை ஏழு கூடைநிறைய எடுத்தார்கள் . (மாற் 8 : 5-9)

***************

வகுப்பு : 3

பாடம்18

# கர்த்தராகிய இயேசு மறுரூபமானது

(மத்தேயு 17 : 1 – 9)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

1 கொரிந்தியர் 15:51,52

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும கடைசி எக்காளம் தோனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.

எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்,

**II** *போதனை* : (2 Marks)

இந்த உலகத்தில் கர்த்தராகிய இயேசுவைப் போல் ஜீவிப்பவர்கள் அவரைப போல மருரூபமாவார்கள்.

**III** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு – பிதாவின் நேசகுமாரன் (மத். 17 : 5)
2. இயேசு – மனுஷ குமாரன் (மத். 17 : 9)
3. யோவான் – யாக்கோபின் சகோதரன் (மத் 17 : 1)

**IV** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. இயேசுவின் முகம் ___________________ போலப் பிரகாசித்தது.அவருடைய வஸ்திரம் போல ___________________வெண்மையாயிற்று..
2. மருரூபமலையில் ___________________ , ___________________ இயேசுவோடு பேசுகிறவர்களாக காணப்பட்டார்கள்.
3. இயேசுவும் பேதுருவும் தருரூபமலையில் பேசும் போது ___________________அவர்கள் மேல் நிழலிட்டது.

*விடைகள்*

*1. சூரியன், வெளிச்சம் (மத். 17 : 2) 3. ஒளியுள்ள மேகம் (மத். 17 : 5)*
*2. மோசேயும், எலியாவும் (மத். 17 : 3)*

**V** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (1 Mark)

1. இயேசு தனித்திருக்கும்படி எங்கே போனார்?
   உயர்ந்த மலைக்கு *மத் 17 : 1)*
2. பேதுரு மருரூபமலையில் எத்தனை கூடாரங்களை போடவேண்டும் என்றான்?
   மூன்று *(மத் 17: 4)*
3. மேகத்திலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டு, பயந்து முகங்குப்புற விழுந்தது யார்?
   சீஷர்கள் *( மத் 17:7)*

**VI** *ஓரிரு வார்த்தைகளில் விடையளி :* (1 Mark)

1. இயேசு மருரூபமலைகக்கு எத்தனை சீஷர்களைக் கூட்டிக் கொண்டு போனார் ?
   மூன்று. (மத்17 : 1)

2. மருரூபமலையில் மூன்று கூடாரங்களை போட வேண்டும் என்று இயேசுவிடம் கூறியது யார்?
பேதுரு (மத்17 : 4)

## VII. ஓரிரு வாக்கியங்களில் விடையளி:-

1. இயேசு யாருக்கு முன்பாக மறுரூபமானார்?

பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபுக்கு முன்பாக மறுரூபமானார் (மத் 17:2).

2. இயேசு எப்படி மறுரூமானார் ?

இயேசுவின் முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது, அவருடைய வஸ்திரம் வெளிச்சத்தைப்போல் வெண்மையானது (மத் 17:2)

3. மறுரூபமான மலையில் இயேசு யார், யாரோடு பேசுகிறவராகக் காணப்பட்டார்?

மோசே, எலியா (மத் 17:3)

4. மறுரூப மலையில் மேகத்திலிருந்து உண்டான சத்தம் என்ன?

" இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்கு செவி கொடுங்கள்" (மத் 17:5)

5. மேகத்திலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்ட சீஷர்கள் என்ன செய்தார்கள்?

முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள் (மத் 17:6)

6. மறுரூப மலையில் பயப்பட்ட சீஷர்களுக்கு இயேசு என்ன செய்தார்?

இயேசு அவர்களைத் தொட்டு; எழுந்திருங்கள் பயப்படாதேயுங்கள் என்றார். (மத் 17:7)

7. மறுரூபமலையிலிருந்து இறஙகுகிறபொழுது இயேசு சீஷர்களிடம் என்ன கூறினார்?

'மனுஷ குமாரன் மரித்தோரிலிருந்து எழந்திருக்கும் வரைக்கும் இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்' என்று இயேசு கட்டளையிட்டார். (மத் 17:9)

## VIII. சுருக்கமான விடையளி:-

1. மறுரூப மலையில் பேதுருவின் வாஞ்சை என்ன?

இயேகவை நோக்கி "ஆண்டவரே நாம் இங்கே இருக்கிறது நல்லது உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம்" என்று தன் வாஞ்சையை தெரிவித்தான்.

*******************

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

பாடம் - 19

வகுப்பு - 3

# கர்த்தராகிய இயேசு சந்திரரோகியைச் சுகமாக்கியது

## மத்தேயு 17:14:21, மார்கு : 9:14-29

1. மனப்பாடம் வசனம் :

மதிப்பெண் : 2

எபேசியர் 6:16-18

(16) பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

(18) எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.

போதனை :

மதிப்பெண் : 2

ஒருவன் பிசாசை எதிர்த்து அவனை ஜெயிப்பதற்கு விசுவாசமும் உபவாசமும் இடைவிடாத ஜெபமும் அவனுக்கு இன்றியமையாதவையாகும்.

3. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 9) | இயேசு | ஆண்டவரே | |
| 10) | இயேசு | போதகரே | (மத்தேயு 17.15) |
| 11) | அசுத்தாவி | அலைக்கழித்து | (மாற்கு 9:17) |
| 12) | அசுத்தாவி | கொல்லும்படிக்கு தீயிலும் | (மாற்கு 9:10) |
| 13) | அசுத்தாவி | இவனை கொல்லும்படிக்கு தண்ணீரிலும் | (மாற்கு 9.22) |
| | | | (மாற்கு 9:22) |

4 கோடிட்ட இடங்களை நிரப்புக.

மதிப்பெண் : 1

அ. அவனைச் சொஸ்தமாக்க __________ கூடாமற் போயிற்கு என்றான்

ஆ. இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் ______ ______ தள்ளிற்று.

இ. இயேசு சீடர்களிடம் சொல்லியது __________ விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையை பார்த்து இந்த இடம் விட்டு அப்புறம் போ என்று சொல் அது அப்புறம் போம்.

ஈ. அதற்கு அவர் (இயேசு) இவ்வகை பிசாசு __________ __________ யன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

| | |
|---|---|
| 1. சீடர்களால் (மத்தேயு. 17:16) | 3. கடுகு விதையளவு (மத்தேயு 17:20) |
| 4. தீயிலும் தண்ணீரிலும் (மாற்கு 9:22) | 5. ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே (மாற்கு 9:29) |

5. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக : மதிப்பெண் : 1

11. மறுரூப மலையிலிருந்து அவர் இறங்கி வந்தவுடன் இயேசு யாரை சுகமாக்கினார்.
அ) சந்திரரோகி ஆ) முடவாதம் இ) குஷ்டரோகி

12. இயேசு அவனை நோக்கி விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.
அ) சீடர்கள் ஆ) ஜனங்கள் இ) சந்தா ரோகியின் தகப்பன்

13. எந்தவிதமான விசுவாசம் நமக்கு இருந்தால் மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போகும்.
அ) பெரிய விசுவாசம் ஆ) கடுகு விதையளவு விசுவாசம் இ) சிறிய விசுவாசம்

| விடைகள் |
|---|
| 1. சந்திரரோகி (மத்தேயு. 17:15,18) |
| 2. சந்திரரோகியின் தகப்பன் (மாற்கு 9:23) |
| 3. கடுகளவு உள்ள விசுவாசம் (மத்தேயு 17:20) |

6. ஓர் இரு வார்த்தைகளில் விடையளிக்கவும். மதிப்பெண் : 1

14. இயேசு மறுரூப மலையிலிருந்து இறங்கி வந்த பிறகு சீடர்களுடன் யார் தர்க்கிக்கிறதையும் (வாக்குவாதம் செய்வதை) கண்டார்.
பதில் : வேதபாரகர் (மாற்கு 9:14)

15. அசுத்தாவி சந்திரரோகி பிடித்தவனை கொள்ள என்ன செய்தது? அவனை கொல்லும்படிக்கு.
பதில் : அநேகந்தரம் / தீயிலும், தண்ணீரிலும் தள்ளிற்கு (மாற்கு : 9:22)

16. என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டு இயேசுவிடம் சொன்னவன் யார் ?
சந்திரரோகம் பிடித்தவனின் தகப்பன் (மாற்கு : 9:24)

7. இரண்டு வரிகளில் விடை எழுதுக : மதிப்பெண் : 2

21) சிறு வயது முதற்கொண்டே சந்திரரோகியாகி அவனை அசுத்தாவி எப்படி அலைக்கழித்தது? (அது (அசுத்தாவி) அவனை அலைக்கழிக்கிறது அவனை நுறைத்தள்ளி பல்லைக் கடித்து, சோர்ந்து போனான்.
இவனைக் கொல்லும்படிக்கு அது தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்கு (மாற்கு 9:18, 20, 22)

22) இயேசுவை கண்டவுடனே அந்த ஆவி சந்திரரோகி பிடித்த பிள்ளையை என்ன செய்தது?
பதில் : அந்த ஆவி அவனை அலைக்கழித்தது அவன் தரையிலே விழுந்து நுரை தள்ளிப் புரண்டான். (மாற்கு 9:20)

23) சந்திரரோகி பிடித்த பிள்ளையின் தகப்பன் இயேசுவிடம் வேண்டிய வேண்டுதல் என்ன?
பதில் : நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்கள் மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றான். (மாற்கு : 9 : 22)

24) இயேசு பிள்ளையின் தகப்பனிடம் விசுவாசத்தை குறித்து சொன்ன வார்த்தை யாது?

பதில் : இயேசு அவனை நோக்கி நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும் விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். (மாற்கு 9:23)

25) இயேசு விசுவாசத்தை குறித்து சொன்னபோது சந்திரரோகி தகப்பன் என்ன செய்தான்?

பிள்ளையின் தகப்பன் விசுவாசிக்கிறேன் ஆண்டவரே என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.

26) இயேசுவிடத்தில் சீடர்கள் வந்து அந்த ஆவியை துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற் போயிற்று என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு இயேசு கொடுத்த மறுமொழி என்ன?

அ) அதற்கு இயேசு : உங்கள் விசுவாசத்தினாலேதான், கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாது காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆ) இந்த சாதி பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே யன்றி, மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார். (மத்தேயு 17:19:21)

8. விரிவான விடையளிக்கவும் :

மதிப்பெண் : 4

6) இயேசு எப்படி சந்திரரோகியை சுகமாக்கினார் ?

அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு; அந்த அசுத்த ஆவியை நோக்கி ஊமையும், செவிடுமான ஆவியே இவனை விட்டுப் புறப்பட்டுப் போ இனி இவனுக்குள் போகாதே என்று உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்.

அப்பொழுது அது சத்தமிட்டு அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப் போயிற்று. அவன் செத்துப் போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாக செத்தவன் போல் கிடந்தான்.

இயேசு அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கினார். உடனே அவன் எழுந்திருந்தான். (மாற்கு 9:25-27)

**பாடம் - 20**

வகுப்பு - 3

# கர்த்தராகிய இயேசு வரிப்பணம் செலுத்தியது

## மத்தேயு 17:24:27

1. <u>மனப்பாடம் :</u> மதிப்பெண் : 2

ரோமர் 13 : 7 :-

ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும் எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வை செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள். எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்.

2. <u>போதனை :</u>

நாம் சபைக்குச் செய்ய வேண்டிய நம்முடைய கடமைகளைச் செய்வதைத் தவிர தேசத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றவும் கடனாளிகளாயிருக்கிறோம்.

3. <u>ஓர் இரண்டு வார்த்தைகளில் விடை எழுதுக.</u>

அ. எப்பொழுது எந்த இடத்தில் வரிப்பணம் வசூலிப்பவர்கள் வந்து இயேசுவிடத்தில் வரிபணம் வசூலிக்க வந்தார்கள்.

கப்பர் நகூமில (மத்தேயு : 17.24)

ஆ. வரி வாங்குபவர்கள் யாரிடத்தில் வந்து உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்தவில்லையா ? என்று கேட்டார்கள்.

பேதுருவிடம். (மத்தேயு 17:24)

இ. பூமியின் இராசாக்கள் யாரிடத்தில் தீர்வை வரி வாங்குகிறார்கள் என்று பேதுருவிடம் இயேசு கேட்டார்.

அந்நியரிடத்தில் (மத்தேயு 17:26)

ஈ. பேதுரு எங்கிருந்து வெள்ளிப்பணம் எடுத்து வரி செலுத்தினான் ?

பேதுரு ஒரு மீனை பிடித்து மீனின் வாயிலிருந்து வெள்ளிப்பணம் எடுத்து வரி செலுத்தினான். (மத்தேயு : 17:27)

உ

ஆகிலும் பிள்ளைகள் வரிபணம் செலுத்த வேண்டும் என்று ஏன் இயேசு பேதுருவிடம் சொன்னார்?

நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு. (மத்தேயு 17.27)

II. இரண்டு வரிகளில் விடை எழுதுக.

அ) வரிபணம் வாங்குபவர்கள் பேதுருவிடத்தில் என்ன கேட்டார்கள். பேதுருவின் பதில் என்ன ?

வரிபணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து உங்கள் போதகர் வரிபணம் செலுத்தவில்லையா என்று கேட்டாரக்ள். ஆம் போதகர் வரிபணம் செலுத்துகிறார் என்று பேதுரு பதில் சொன்னான். (மத்தேயு 17:24.25)

ஆ) ஆண்டவராகிய இயேசு வரிபணம் செலுத்துவதை குறித்து பேதுருவுடன் என்ன ஆலோசனை செய்தார்?

இயேசு அவனை நோக்கி சீமோனே உனக்கு எப்படித் தோன்றுகிறது. பூமியின் ராஜாக்கள் தீர்வையும், வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ அந்நியரிடத்திலோ யாரிடத்தில் வாங்குகிறார்கள் என்று கேட்டார்.

இ) வரி செலுத்த எப்படி பணம் பெற என்ன வழிமுறையை பேதுருவிடம் இயேசு சொன்னது யாவை ?

நீ கடலுக்குப் போய் தூண்டில் போட்டு முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து அதன் வாயைத் திறந்து பார். ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய் அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

## பாடம் - 19

வகுப்பு - 3 **கர்த்தராகிய இயேசு சந்திரரோகியைச் சுகமாக்கியது**

## மத்தேயு 17:14:21, மார்கு : 9:14-29

1. மனப்பாடம் வசனம் :

மதிப்பெண் : 2

எபேசியர் 6:16-18

(16) பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

(18) எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.

போதனை :

மதிப்பெண் : 2

ஒருவன் பிசாசை எதிர்த்து அவனை ஜெயிப்பதற்கு விசுவாசமும் உபவாசமும் இடைவிடாத ஜெபமும் அவனுக்கு இன்றியமையாதவையாகும்.

3. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 9) | இயேசு | ஆண்டவரே | (மத்தேயு 17.15) |
| 10) | இயேசு | போதகரே | (மாற்கு 9:17) |
| 11) | அசுத்தாவி | அலைக்கழித்து | (மாற்கு 9:10) |
| 12) | அசுத்தாவி | கொல்லும்படிக்கு தீயிலும் | (மாற்கு 9.22) |
| 13) | அசுத்தாவி | இவனை கொல்லும்படிக்கு தண்ணீரிலும் | (மாற்கு 9:22) |

4 கோடிட்ட இடங்களை நிரப்புக.

மதிப்பெண் : 1

அ. அவனைக் சொஸ்தமாக்க __________ கூடாமற் போயிற்கு என்றான்

ஆ. இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் ______ ______ தள்ளிற்று.

இ. இயேசு சீடர்களிடம் சொல்லியது __________ விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையை பார்த்து இந்த இடம் விட்டு அப்புறம் போ என்று சொல் அது அப்புறம் போம்.

ஈ. அதற்கு அவர் (இயேசு) இவ்வகை பிசாசு __________ __________ யன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

| | |
|---|---|
| 1. சீடர்களால் (மத்தேயு. 17:16) | 3. கடுகு விதையளவு (மத்தேயு 17:20) |
| 4. தீயிலும் தண்ணீரிலும் (மாற்கு 9:22) | 5. ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமே (மாற்கு 9:29) |